# தெய்வீக பாமாலை



29.09.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் இரத்தினம் புவனேஸ்வரி

அவர்களின்

சிவபதப்பேறு நினைவாக வெளியிடப்பட்ட

# தெய்வீக பாமாலை

**29.09.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடாத்தி
நாம் வாழ்வில் மேம்பட்டு சிறப்புடன் வாழ வழிசெய்து
எல்லோருக்கும் இனியவராய் விளங்கி
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத் தெய்வத்தின் பொன்னடிக்கு
காணிக்கையாக்கி இம்மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

- குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



மண்ணுலகில்
05.11.1936

விண்ணுலகில்
31.08.2015

அமரர்

# இரத்தினம் புவனேஸ்வரி

அவர்களின்

## திதி வெண்பா

பார் புகழும் மன்மத ஆண்டு ஆவணித் திங்கள்
துதியை திதியில் அதிகாலை வேளையில்
ஊர் புகழும் உத்தமியாய் புவனேஸ்வரி இரத்தினம்
அவர்கள் மகாமாரி அவள் திருப்பாதத்திற்கே அடைக்கலமாகி
விட்டார் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கயலார்புனற் செல்வமல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே.

ஆலந்தானுகந் தமுது செய்தானை
யாதியையமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் முடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுளானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலவார்குழ லாளுமை நங்கை
　　யென்றுமேற்றி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
　　காணக் கண்ணடி யேன் பெற்றவாறே.

## திருவாசகம்

அன்றே யென்றன் ஆவியும்
　　உடலும் உடமை யெல்லாமுங்
குன்றே அனையாய் யென்னை யாட்
　　கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
　　என்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
　　நானோ இதற்கு நாயகமே.

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்(து)
　　உன் விரையார் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
　　ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
　　கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
　　பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
　　திருப்பெருந்துறை உறைசிவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதாங் கருணையும் காட்டி
அன்னை தேன்கலந்து இன்அமுது உகத்து அளித்தாங்கு
அருள்புரி பரமர்தம் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னை தேன்சொரியும் பொழிலகம் குடைந்து
போறிவரி வண்டினம் பாடும்
தென்ன தேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலமே

## திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி புகந்
காட்செய்மின் குழும் புகந்
தண்டங்கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுள்ள பொருளன்றே
பல்லாண்டு கூறுதுமே.

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய கலப்
பொன்னிக் செய்மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கடங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருத்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வத்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட் பர மற்குச் சுருதியின்
முற்பட் டது கற்பித் திருவரும்
முப்பது மூவர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப் பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற் கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத் தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப் பவு ரிக்குத் தரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்திப் புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற் றெழ நட்பற் றவுணரை
வெட்டிப் பலி யிட்டுக் குலகிரி
குத்துப் பட வொத்துப் பொரவல பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்!
கோன்முறை அரசு செய்க! குறைவிலாதுயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்களோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்!

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் வணக்கம்



சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

மூஷிகவாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

- ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

இலங்கைத்தீவில் ஈழநாட்டில் சுன்னாகம் வரியப்புலத்தில் இளையதம்பி பார்வதிப்பிள்ளைக்கு மூத்த மகளாக 1936ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 5ஆம் திகதி புவனேஸ்வரி பிறந்தார். இவருடன் இராஜேஸ்வரி, திலகேஸ்வரி, மகேந்திரன் ஆகிய சகோதரர்களும் பிறந்தார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை திருஞானசம்பந்தா வித்தியா சாலையிலும் பின் மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் அதன்பின் உயர்கல்வியை ஸ்கந்தவரோதய கல்லூரியிலும் கல்வி கற்று, அதன் படி தனது வாழ்க்கையை சிறப்பாக வாழ்ந்தார்.

அவர் தனது திருமண வயதில் சுன்னாகம் கப்பம்புலத்தைச் சேர்ந்த கந்தையா நாகம்மா தம்பதிகளின் இளைய மகனான இரத்தினம் என்பவரை திருமணம் செய்தார். அவரது இல்லற வாழ்வின் நற்பயனாக 6 மழலைகளைக் கண்டு மகிழ்வுற்றார். மூத்தமகள் பங்கயற்செல்வியை இறைவன் காட்டிவிட்டு எடுத்துக் கொண்டாலும் குமுதினி, மாலதி, சுனிதா, சுகந்தி, பிரதீஸ் ஆகிய ஐந்து செல்வங்களையும் கண்ணை இமைகாப்பதுபோல காத்தார். அவர்களுக்கு கல்வி அறிவு மட்டுமன்றி ஒழுக்கம், நேர்மை, உண்மை, உதவி மனப்பான்மை ஆகிய நற்பண்புகளுடன் அவர் களை வளர்த்தார்.

தனது பிள்ளைகளிற்கு காலத்தில் பயிர்செய்ய வேண்டும் எனும் கூற்றுக்கேற்ப குமுதினி வரதராசாவையும், சுனிதா தயாதரனையும், சுகந்தி சுதாகரனையும், பிரதீஸ் நித்தியாவையும் மணம்முடித்து வைத்து மருமக்களையும் தனது பிள்ளைகள் போலவே அனுசரித்து அன்புகாட்டினார். அவரது அன்பு பிள்ளைகளைத் தொடர்ந்து தனது பேரக்குழந்தைகளான மிதுலா, கயானி, கீர்த்தனா, கிஸ்ணபிரசாத், லோஷிகா, கனிஷ்கா, துவாரகி, அபிஷனா, பிரனாஸ், பிரஷாங்கி, கபிஷ்ரன் அவர்களுடனும் தொடர்ந்தது .

இல்லறவாழ்வு மட்டுமன்றி ஆன்மீக வாழ்விலும் தனது நேரத்தை செலவழித்தார். அயலிலுள்ள கோவில்களுக்குச் சென்று ஆன்மீகத்தை வளர்த்ததோடு தன்னால் முடிந்த உதவிகளையும் செய்தார். அதுமட்டுமன்றி பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் ஆலயத்தில் தொண்டு செய்தவற்கு ஊக்குவித்தார். இவரது இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியின் பலனாக அவரது அன்பு மகனின் உதவியுடன் கடந்த வருடம் இந்தியா சென்று பிரசித்திபெற்ற தலங்களான சிதம்பரம், மதுரை, மீனாட்சி, தஞ்சைப் பெருங்கோயில், சுவாமிமலை, பழர்முதிர்ச்சோலை, பழனி ஆகிய இடங்களுக்குச் சென்று தரிசித்து வரும்வேளையில் கடும் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டார். அவரால் தனது வேலைகளை தானே செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. அப்போது பிள்ளைகள் அவருக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டது. அந்தவேளையில் பிள்ளை களிடம் கூறினார். எங்கள் அம்மாளாச்சியிடம் சொல்லிவிட்டு வந்தேன் அம்பாளின் கும்பாபிஷேகம் பார்க்கவேண்டும் என்று. அம்பாள் ஏன் என்னை படுக்கையில் போட்டாவோ தெரியவில்லை என்று. அவவின் இறைபக்தியின் பலனாக அம்பாளின் அருள் அவவிற்குக் கிடைத்தது. நான்கு நாட்களின் பின் ஓரளவு குணம டைந்து தனது ஊருக்குவந்து பூரணகுணத்துடன் அம்பாளின் கும்பாபிஷேகத்தைப் பார்க்கும் பெரும் பாக்கியம் அவவிற்குக் கிடைத்தது.

புவனேஸ்வரி என்னும் பெயருக்கு இணங்க பூரணசாந்தத் துடனும், பொறுமையுடனும் தனது இறுதி மூச்சுவரை சுறுசுறுப் புடனும் உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனை வருடனும் அன்பாகவும், அக்கறையுடனும் பழகினார். அதுமட்டு மன்றி உதவி என்று கேட்டு வருபவருக்கு இல்லை என்று சொல்லாமல் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார்.

அவவின் நோய் அவவின் உடல்நிலையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதித்தது. காலம் அவரோடு பேசியது, காலம்தான் முடிவதாய் சொன்னது. ஆம் அன்று 31.08.2015 திங்கட்கிழமை அதிகாலை 4.50 மணியளவில் சூரியன் உதயமாகும் வேளையில் அவவின் விருப்பத்திற்கு ஏற்றமாதிரி பிள்ளைகளும் பேரப்பிள்ளை களும், சகோதரர்களும் சூழ்ந்து நிற்க.

எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு புன்னகை பூத்த முகத்துடன் இறைவனடி சேர்ந்தார். எங்கள் குடும்ப விளக்கின் நினைவுகள் என்றுமே பசுமையானது, அழியாதவை. நாம் வாழும் வரை அந்நினைவுகள் எம்முடன் வாழும் அந்த நினைவுகளுக்கூடாக எமது அன்னை என்றும் எம்முடன் வாழ்வார்.

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க.

- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள். (Ego)
- அர்த்தமில்லாமலும் பின்வளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப் பதை விடுங்கள். (Loose Tolk)
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள். (Compromise)
- சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்பதை உணருங்கள். (Toterence)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibillty)
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற் களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும்கூட நேரமிலாது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன்வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவார்தம் கை.

# தியான சுலோகம்

ஓம் கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்தஜம்பு பல சார பட்ஷிதம்
உமா ஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம் !

பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வழி வலமுறை இறையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணேச பூஜையும் காரிய சித்தியும்

## விநாயகர் வாழ்த்து

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கட வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்.

நம் மனதில் தோன்றிய எண்ணங்கள் முழு உருப்பெறவும், செயல்பட வேண்டிய காரியங்கள் இடரின்றி நிம்மதி நிறைவேறவும், மனசஞ்சலத்தில் இருந்து விடுபட்டு நிம்மதி அடையவும், வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவும் முழுமுதற் கடவுளாம் எம்பெருமான் விநாயகரை ஜோதிஷ ரீதியான வழிபட்டு வாழ்க்கையில் வெற்றி பெறுவோமாக!

ஓம்கார ரூபத்தின் உறைவிடமாகி ஆனந்தத்தின் இருப்பிடமாய் இருக்கும் விநாயகப் பெருமான் ஜோதிஷ சாத்திரத்தில் சனிபகவானையும் கேது கிரகத்தையும் ப்ரீதியான கிரகங்களாக்கிக் கொண்டார்.

உருண்டு செல்லும் வாழ்க்கையை தன் 'கோல்' சக்தியால் நிறுத்தி நம்மை அந்தஸ்தில் உயர்த்தி ஆனந்தமயமான வாழ்க்கையை அளிக்கும் கடவுளே விநாயகப் பெருமான். இத்தத்துவத்தை உணர்த்தியதே பிள்ளையார் சுழி.

வாரநாட்களில் செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும், அமாவாசைக்கு 4ம் நாள் (சுக்ல பக்ஷ) சதுர்த்தியும் இப்பெருமானுக்கு உகந்த நாட்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை

இந்த ஸ்தோத்திரமாலையை தினமும் மூன்றுமுறை அல்லது முடிந்தவரை ஓதுக.

சகல காரிய சித்தி உறுதி
காசிபமாமுனி அருளியது

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும்
எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி
இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்புகூறத் தொழுகின்றாம். 1

உலகமுழுதும் நீக்கமற ஒன்றாய்
நிற்கும் பொருள் எவன் அவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாதமேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம் 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி
கருமம் எவனால் முடியும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன்
சரணம் சரணம் அடைகின்றாம் 3

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர்
கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி
அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம். 4

செய்யும் வினை முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக்
கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம் 5

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன்யாவன் விளங்குபர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன்
எண்குணன் எவனப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து
சரணம் அடைகின்றாம் 6

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான்
எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின் மூன்றாய்
நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான்
எவன் வானிடை ஒன்றாய்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற்
சரணம் அடைகின்றாம். 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
மாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதனீன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்து
திருந்திய முதயைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினையறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஓதுமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ ர் முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்

(இது முத்கல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்தது. இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித் தந்துள்ளார்)

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் வியங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க 1

கவின்வளரும் அதரம்கச முகர்காக்க
தாலாங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க. 2

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த்
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கஅகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க. 3

பக்கம் இரண்டையும்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க. 4

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும் அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர்காக்க கிழக்கினிற்புத் தீசர்காக்க 5

அக்கினியிற் சித்தீசர் காக்கஉமா
புத்திரன்தென் ஆசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க 6

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்கஇர
வினும்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கஇராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிப்பேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலமும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க 7

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக்காக்க 8

வென்றிசீ விதம்பகபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடினும்பால் இடையூ றொன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும் 9

உண்டுடுத்தி உறங்கியெழுந் தோயாம லலைந்தென்ன
கண்டெடுத்த மாமுதல்கல் யாணபுரிக் கணபதிக்கும்
தண்டனிட்டார்க் கின்னருள்கூர் தேசிகரா மன்னவர்க்கும்
செண்டுமல்லி மாலையிட்டுச் செந்தமிழ் வாழ்ந்திட வாழ்வோம்

(வெண்பா)

எல்லா உயிர்க்குயிரா யாளுமிறை ஈசனுமை
கல்யாணஞ்சேர் மடத்தைக்கண் பார்த்திவ்-வெல்லையிலே
காவற்குப் பல்லக்குப் பூதத்தைக் காக்கவைத்தே
யாவர்குஞ் சித்தம் நிறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வேழமுகம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே !

சிந்தித்தவர்க்கருள் கணபதி ஜெயஜெய
சீரிய யானைக் கன்றே ”
அன்புடை அமரரைக் காப்பாய் ”
ஆவித்துணையே கணபதி ”
இண்டைச் சடைமுடி இறைவா ”
ஈசன் தந்தருள் மகனே ”
உன்னிய கருமம் முடிப்பாய் ”
ஊர் நவசக்தி உகந்தாய் ஜெயஜெய
எம்பெருமானே இறைவா ”
ஏழுலகுந்தொழ நின்றாய் ”
ஐயா கணபதி நம்பியே ”
ஒற்றை மருப்புடை வித்தகா ”
ஓங்கிய யானைக் கன்றே ”
ஔவிய மில்லா அருளே ”
அஃகர வஸ்து வானவா ”
கணபதி என்வினை களைவாய் ”
ஙப்போல் மழுவொன்றேந்தியே ”
சங்கரன் மகனே சதுரா ”
ஞயநம்பினர்பால் ஆடிய ”
இடம்படு விக்ன விநாயகா ”
இணங்கிய பிள்ளைகள் தலைவா ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவ மறைதெரி வித்தகா ”
நன்னெறி விக்ன விநாயகா ”
பள்ளியில் உறைதரும் பிள்ளாய் ”
மன்றுள் ஆடும் மணியே ”
இயங்கிய ஞானக்குன்றே ”
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ”
இலகக் கொம்பொன்று ஏந்தியே ”
வஞ்சனை பலவும் தீர்ப்பாய் ”
அழகிய யானைக் கன்றே ”
இளமத யானை முகத்தாய் ”
இரகுபதி விக்ன விநாயகா ”
அனந்தலோ டாதிய அடிதொழ அருளே ”

卐 卐 卐 卐 卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பு மவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்.
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

ஒற்றை மருப்பு ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மலெப்பொழுதுங்
கொண்டக்கால் வராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பாணி

எள்ளு பொரிதே வைலப்ப மிக்கும் பயறு மிளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்,
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி யருள்க சப்பாணி
சண்டப் பெருச்சா ளியேறிச் சடைகொண்டு வையத்துலாவி
அண்டத் தமரர் துதிக்க வடியார்க் கருளும் பிரானே
எண்டிக்கு மன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே

## சரஸ்வதி துணை

புத்தகத் துள்ளுறை மாதே பூவி லமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக் கிறைவீ
முத்தின் குடையுடை யாளே மூவுல குந்தொழு தேத்துஞ்
செப்புத் கவித்த முலையாய் செவ்வரி யோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி யெனுந் திருவே
எக்கால முமுனைத் தொழுவே னியலிசை நாடகமென்னும்
முத்தமிழ்க் கல்விக ளெல்லாம் முழுது மெனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ யிருந்து தீருவருள் செய்திடுவாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவினில் அரிதபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

மந்தர கிரியில் வடபா லாங்கோர்
இந்துதவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க் குயிரே
அரனே மறையவற் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பில்
மைந்தரில்லை யென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய வுமையாள் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடு மானிடைப் புன்பிறப் பெய்துதல்
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்
கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவட்குநீ பிள்ளை யாகச்
சென்றவண் வளர்ந்து சிலபகற் கழித்தால்
மன்றல்செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத் தருள விலங்கன்மா மகளும்
பெடைம யிற்சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபின் னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோற்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பொரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட லரிதெனப் பெயர்த்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே னியானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
தருமலி நிழற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
கண்ணுறுங் கூந்தற் றையலை நோக்கி
மீள்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றை வார்சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் பல்தலை மாலையுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண் முழலும் பித்தன் றன்னை
நச்சிநீ செய்தவம் நகைதரு முமக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணஎழுந்றணிமனா புகுதச்
சேடியர் வந்து செழுமலர் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதா யிருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செய்கையைப் பற்றினா னென்றலுந்
தோட லர்கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைம்மலர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கை யினின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கெனச்
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலுக் கல்லவென்
பொற்பமர் கொங்கை பொருந்துநற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
னையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவமென் றஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தனென் றெண்ணி
ஆசனம் நல்கி யருக்கிய முதலாப்
பாத பூனானங்கள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை யமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கர்ப்பூ ரத்தோடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளி யதட்டி லுகந்து முன்வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிவனைத் தாளினை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமுந் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டி முளிற்ப
மரகத மேணி மலைமக டானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே
அரியய னிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுண ரிராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்
கணிக்கருங் பதினெண் கணத்தி லுள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந் ததற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல் வந்திலங்கு முன்றி லகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்காலநாட்டி
மாணிக்க கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழுகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக் கேற்றிப்
பத்திப் படாமுளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மீடற்றனைக
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னை
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்
உம்ப ரெல்லா மொருங்குடன் கூடிக்
கடலென விளங்குங் காவணத் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்த்துட னிருத்திப்
பறையொ லியோடு பனிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக னோமச் சடங்குக னியற்றத்
தறுகலற் றொளிபொற் றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ வரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதணி கருங்குழற் பூவை தன்னுடனே
ஓதநீர் வேலைசூ தூழ்ஞ்சையம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீயென
வருங்கருங் குழலாள் மற்றுமுண் டோஎனத்
திருத்திழை மடந்தை திரும்பினாள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்ம ணிப்பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை யாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவ மதாகிக்
கூடிய கலவியற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறப்பல பெருக மறப்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்பு ழைக்கையோடு
ஐங்கர தலமு மலர்ப்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந் துவர்வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டுங்
கோடி சூரியர்போற் குலவிடு மேனியும்
போழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணுலோர்களும் விரிந்த நான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துனை வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கவர் தங்கட் கருள் சுரந்தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி ஆலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனை யிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்தினி திருந்தபின்
வான வராலும் மானு டராலுங்
கானமர் கொடிய கடுவி லங்காலுங்
கருவி களாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிர ழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன்னாளில்
வரம் பெறுகின்ற வலிமை யினாலே
ஐம்முகச் சீயமொத் தடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கஜமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுங்கண் படுத்திக்
கொடுந் தொழில்புரியுங் கொடுமை கண்டேங்கி
அடுத்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனைமா முகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா வென்று விடைகொ டுத்தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை யேறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைவெண் மருப்பை யொடித்தவ னுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசேர்ந் திடவே
சோர்ந்த வன்வீழ்ந்து நுண்ணென வெழுந்து
வாய்ந்த மூடிகமாய் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்த வெண்மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்வைக் கதிர்வேல் விழிபடைத் தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஒகையோ டெழுந்தாங் குயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல்முக கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனை யர்ச்சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்திவ னேவல் செய்திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென் றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நேற்று நற்பூசை நுடங்கா தாற்றிப்
போற்றி செய்திட்டார் புலவ ரைக்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமர னிருத்தம் புரிந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருங் கைதொழு தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமுந்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டிங் கிழந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவ ருரைக்கு மித்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவு மெய்துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டன னந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்.
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பி நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரத மடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்ந்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துத லுற்றான்
அக்கு நீறணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையில் றந்த மொருகையிற் பாசம்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்
என்றிமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தி யாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தி யோகங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தாற்
றீங்குறா தொல்லாஞ் செயமுன் டாகுங்
கரால மைந்துடைக் கணபதிக் குரிய
விரதமொன் றுளதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி னினைந்த பொருள்கை கூடும்
மேவலர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விதமும்
விரித்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கு வன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருவுண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசிலா மண்ணா லமைந்தலுந் தகுமால்
பூசை திடுமிடம் புனித மாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தைசேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி னினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முத லர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லிபிடே கித்தக்
கந்தஞ் சாத்திக் கணேச மந்திரத்தால்
ஈசுர புத்திர னென்னு மந்திரத்தான்
மாசகல இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாச்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னிசுர புத்திரன்
ஆகு வாகன னருடரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னு நாமங்களால்
ஆரம் பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தழைமமுப் புடைக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்புநெய் பொரிக்கறி பால்யிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து
உருத்திரப் பிரியவென் றுரைக்கு மந்திரத்தால்
நிருந்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நா னான்குப சாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளருக்கு
குண்ணறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் ஈர்ந்திட்டு அருச்சகன் தனக்கு
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் றானமாக் கொடுத்து
நைமித் திகமென நவிறரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத் திராசுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாளட தமயந்தி
அன்னா னிவனை யர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை யடைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை யடைந்தான்
பகீரத னென்னும் பார்த்திவ னிவனை
மதிதலந் தன்னின் மலர்கொ டர்ச்சிந்துத்
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்ட தேவதைகளு மர்ச்சித் திவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ட போகத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்மணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டு போமளவிற் குஞ்சர முகனை
வண்டு பாண்மிழற்றா மலர்கொ டர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் றனைப்புறங் கண்டு
யாமு மங்கவளை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற் கரிதால்
அப்படி நிவிரு மவனை யர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுகன் நெறித்தோன் எடுத்திவை
அன்றுமுதற் தருமறும் மறுசருயுரைப்ப கரு மிவனைப்
பூசனை புரிந்து கட் புலனிலாள் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத் தரசியல் பெற்றார்.
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தால் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திரவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மாமரரு முனிவரும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் பேவின் நீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமரவேல் விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்
ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக் கேதென
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றியி னநயனமும் நீயே யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந் தினிதிருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை யொதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை யவன்கையி லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்று கையேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்க வொண்ணாமற்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கர மீராறுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூணெனத் திரண்ட தோளீ ராறும்
மாண யிலாதி வான்படை யுங்கொண்
அறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்ந் துடன்கூடி
அறுமீன் களைப்பா லளித்தி ரென்றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறு மவுணரை யொறுத்தி டென்றனுப்ப
இருளைப் பருக மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
குருகுபேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுதே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்
அமரர் கோனுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்
சமரவே லுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்தது கண்டே
அண்ட ரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்செய்ய வேண்டுநீ யம்பிகா பதியென
இமைய ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண் டெம்விளைவினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திமுன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் றோற்ப
இன்பவாயி தழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான்வென் றேனென
ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சிய மிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா ளென்றுந்
தோற்ற நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி யுடனங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி யங்குருத்து
நோக்கி யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதன நோக்கிப்
பொய்க்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தி லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல் வீற்றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழிருந்தான்
கம்ப மாகத்துக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூலேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகைக் கழிந்தபின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத் தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியி லெழுந்தும்
ஆதி விநாயகற் கான வெழுந்தும்
மூன்றெழுத் ததனான் மொழிந்த மந்திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகன் மதலையை வழிபா டாற்றி
இருகது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடு விதானித்து
மலர்பல தொடுத்திடு மாலைக ளாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிக்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல்லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தள கூவிளம் முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
தீருடன் சர்க்கரை செவ்விள நீரான்
பார்ற்று நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானு நோற்பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொ டிவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனா மைங்கர னருளால்
விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேதென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் னுரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட நோற்றபின்
மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியள்தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மக னோன்பின் னுறுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ் சூரறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்தி நோற்பேனென
இறைவன் கதைசொல வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்து கண்டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனக்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்கு நீறணியு மரன்முத லளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கின விநாயகன் விரத நோற்றதன்பின்
சுடர்க்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டு நீங்கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கைலையி லுற்றான்
பரிவொ டிவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுத்தார் விக்ர மாதித்தன்
மறிகடற் புவிபெற வருத்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதள் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்த வன்புடனிவ் விரத நோற்பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ளோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யிவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச் சிறையிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இளையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோ டடைகா யவைபல வைத்துச்
செப்ப முடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புத் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப் பொழுதிவளிங் கிருக்க லாகாதென
அயற் கடையவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுந் திருப்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர் தம்மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசு தூய் தாங்குத் தொழிலோர் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந் திருப்ப
அவ்வை செல்லு மகங் கடோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தான் டுலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லு விக்கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் புழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு
மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்றாட
மெத்தவுண் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்து முன்னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக னோன்பு நோற்றிடுகெனக்
கரத்து மூவேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலு மாம்பழப் பண்டமுஞ்
செப்ப மதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதற்பின்
சக்கர வாள சைனி யத்தோடு
விக்ர மாதித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுள மெலிந்தே
அவ்வை தன்மனை யங்கவ ரணுக
எய்துந் தாகமும் மிளைப்புங் கண்டு
செவ்வே யவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரி யென்பவள் டன்னை
அப்பமு நீரு மரசற் கருளெனச்
செப்பிய வன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமு மொரு பணிகாரமும்
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வை நான்சென் றரசற் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனம்மிக மகிழ்ந்து
திங்களேர் வெள்ளிச் சிவிகையி தேற்றிக்
கொண்டூர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விபுகும் புத்திரரோ டெப்பொருளும்
மண்ணு நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
றிருக்கதையைக் கேட்க சிறந்து.

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி னோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வர் நோலாதருகிருந்து
கேட்டோர்க்கும் வராது கேடு.

குலியார் நோற்கிற் றுணைவர் தமைப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாநோற்கில் - மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுர்த்தி விரதம்

ஒரு சமயம் விநாயகர் கைலாயத்தில் நர்த்தனம் செய்திருக் கிறார். சரிந்த தொந்தி குறுகிய கால்கள். இவரைப் பார்த்த சந்திரன் சிரித்தான். ஒன்று சிரிப்பை அடக்கி இருக்க வேண்டும். இல்லையேல் அப்படி சிரித்ததற்கு ஒரு பொய்யையாவது சொல்லியிருக்க வேண்டும். சந்திரன் இந்த இரண்டையும் செய்யவில்லை. விநாயகர் கோபித்து சந்திரனைச் சபித்தே விட்டார். சாபம் : "அன்று முதல் சந்திரன் உருவை எவருமே பார்க்கமாட்டார்கள். கண்டவரும் நிந்தை செய்து ஒதுக்குவார்கள். அத்தகைய நீசனாக ஆகட்டும்" என்பதுதான்.

சந்திரன் அன்றுமுதல் கலையிழந்து தேய்ந்து மெலிந்தான். கண்டவரும் ஒதுக்கினர். கடைசியில் விநாயகரிடமே வந்து மன்னிப்புக் கேட்டான். விநாயகர் மனம் இரங்கி சுக்ல சதுர்த்தியில் உன்னைக் காண்பவர்க்கெல்லாம் வீண் அபவாதம் ஏற்படட்டும். ஆனால் ஆவணி மாதம் சுக்ல சதுர்த்தியில் என்னைப் பூஜித்தால் அந்த அபவாதம் நீங்கட்டும் என்று சாபத்தை மாற்றினார். இது காரணமாக வளர்பிறை (நான்காம் பிறை) சதுர்த்தியன்று இன்று மக்கள் சந்திரனைப் பார்க்காது ஒதுக்கிறார்கள். அப்படித் தப்பித்தவறி பார்ப்பவர்கள் ஆவணி மாதம் சுக்ல சதுர்த்தியில் விரதம் அனுஷ்டித்து விநாயகரை வணங்கி சாப விமோசனம் பெறுகின்றனர்.

அன்றுமுதல் சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இவ்விரதம் முக்கியமாக பெண்கள் அனுஷ்டிக்க வேண்டியது. காரணம் இந்த உலகில் ஆண்களைவிட பெண்களே காரணம் இல்லாமல் வீண் அபவாதத்துக்கு உள்ளாகின்றனர். ஆதலால் அவர்கள் மேல் ஏற்படும் வீண் அபவாதங்கள் நீங்கவும் அவர்கள் விரும்பும் பிள்ளைப்பேறு முதலிய எண்ணங்கள் சித்தி பெறவும் சித்தி விநாயகரை அவர் விரும்பிய சதுர்த்தி அன்று விரதம் அனுஷ்டித்து வழிபடவேண்டும். வருஷம் முழுவதும் 24 சதுர்த்தியிலும் விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஷ்டிப்பதோடு ஆவணி சுக்ல சதுர்த்தியில் விரதம் பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவது மூலம் பெறுதற்கரிய பேறுகளைப் பெறலாம்.

## விநாயகருடைய விரதங்கள்

வெள்ளிக்கிழமை, சதுர்த்தி, மார்கழி மாதம் வளர்பிறை ஷஷ்டி ஆகிய நாட்களில் விநாயகரை நன்கு உபவாசம் இருந்து வழிபட வேண்டும்.

ஆவணி வளர்பிறை சதுர்த்தி மிகவும் சிறந்தது.

விரத நாளில் விநாயகர் திருக்கோவிலுக்குச் சென்று நெய் தீபம் இட்டு அறுகு சாத்தி வலம் வந்து குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வழிபாடு புரிக.

விநாயகருக்கு துளசி சாத்துதல் கூடாது.

## பிரதோஷ வரலாறு

உலகில் அன்றும், இன்றும் நல்ல சக்திகளும், அதற்கெதிரான தீயசக்திகளும் நிறைந்ததாக விளங்குகின்றது. இறைவன் நல்லோரைக் காக்கவும், பொல்லாதவரை, தீயசக்திகளைச் சங்காரம் செய்தும் தமது திருவருளை வழங்குகின்றார். அந்தவகையில் பிரதோஷ வரலாறும் இவ் உண்மையையே நமக்கு உணர்த்துகின்றது.

தேவர்கள், அசுரர்களின் கொடுமை தாங்கமுடியாமல் அல்லலுற்றார்கள். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் இடையே போர்மூண்டு வந்தது. தேவர்கள் தாம் அழிந்துவிடுவோமோ என மனம் நொந்து அச்சமுற்றனர். அசுரர்களின் ஆதிக்கமும் செயற்பாடும் வலிமைபெறத் தொடங்கியது. இதனை எண்ணி சிந்தித்த தேவர்கள் பிரமதேவனிடம் இது பற்றி முறையிட்டனர்.

தேவர்கள் தமக்கு மரணம், முதுமை என்பவை என்றும் அணுகாமலும் எப்போதும் என்றும் இளமையோடும் இறவாத நித்திய ஜீவர்களாகத் திகழவேண்டும் என்றும் எண்ணினர்.

இவ் எண்ணத்தைப் பிரமதேவருடன் சென்று, திருமாலிடம் தெரிவித்தனர். திருமால் அவர்களை நோக்கி மந்திரமலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடையுமாறும் அதிலிருந்து தோன்றும் அமுதத்தினை உண்டால் நீங்கள் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும் என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலின் கட்டளையைத் தலைமேற்கொண்டு தேவர்களும் திருப்பாற்கடலைக் கடையவேண்டிய ஆயத்தங்களை மேற்கொண்டனர்.

திருப்பாற்கடலிலே மந்திரமலையை மத்தாக நாட்டி, வாசுகிப் பாம்பைக் கயிறாகக் கொண்டு தேவர்கள் அமுதம் பெறக் கடைய ஆயத்தமானார்கள். இதனைக் கேள்வியுற்ற அசுரர்களும் அங்குவந்து தாமும் பங்குபற்றப் போவதாக வாதம் புரிந்தனர். இதனால் தேவர்களும், அசுரர்களும் ஒருவாறு சமாதானத்துக்கு வந்து வாசுகிப் பாம்பின் வால் பக்கம் அசுரர்களும், தலைப்பக்கம் தேவர்களும் பிடித்து பாற்கடலைக் கடைந்தபோது வாசுகிப் பாம்பு வலிபொறுக்கமால் அக்கினிக் காற்றை மூச்சு வழியாக வெளிப்படுத்தியது. தலைப்பக்கம் இருந்ததேவர்கள் அதன் வெம்மை தாங்காமல் அஞ்சினார்கள். இவ்வேளை மந்திரமலையும் கடலுக்குள் அமிழத் தொடங்கியது.

இதை அவதானித்த திருமாலும் தேவர்களின் அச்சத்தைப் போக்கவும், மந்திரமலை அமிழ்வதைத் தடுக்கவும் எண்ணி அசுரர்களைப் பார்த்து அவர்களது வலிமையையும் ஆற்றலையும் எடுத்துக்கூறி அவர்களைப் பாம்பின் தலைப்பக்கம் பிடித்துக் கொள்ளுமாறும், தேவர்களை வால்ப்பக்கம் பிடித்துக் கொள்ளுமாறும் செய்தார்.

பின்னர் தானே பெரிய ஆமையாகித் திருப்பாற்கடலில் மந்திரமலையைத் தன் முதுகில் சுமந்து மீண்டும் பாற்கடலைக் கடையுமாறு பணிந்தார். மீண்டும் பாற்கடலைக் கடையுமாறு பணிந்தார். மீண்டும் பாற்கடலைக் கடையக் கடைய மந்திரமலையைச் சுற்றியிருந்த வாசுகி வலி தாங்கமுடியாமல் வேதனை மிகுந்து விஷத்தைக் கக்கியது. அதேபோன்று திருப்பாற்கடலில் இருந்தும் விஷம் தோன்றியது. இரண்டும் இணைந்து ஆலகால விஷம் ஆனது.

இதனால் தேவர்கள் அஞ்சினர். விஷத்தின் வெம்மையையும் அதன் தாக்கத்தையும் கண்ட முனிவர்கள் அகில உலக ஜீவராசிகளும் செய்வதறியாது திகைத்து நிலை குலைந்தனர். இந்நிலையில் திருமாலின் நிறமும் கருநிறமாக மாற்றமைந்தது. இந்நிலையில் தேவர்கள் இத்துன்பத்தில் இருந்து தம்மைக் காக்குமாறு பரமேஸ்வரனிடம் முறையிட பிரமதேவர் திருமாலுடன் திருக்கைலாயம் புறப்பட்டுச் சென்றனர்.

கயிலையைச் சூழவும் விஷம் தாக்கியது. இதனால் தேவர்களும் இடம் வலமாக மாறிமாறி ஓடினர். இதனைக் குறிக்கவே பிரதோஷ காலம் இடம்வலமாக ஆலயத்தின் பிரகாரத்தைப் பாதிபாதியாகப் பக்தர்கள் வலம் வருகின்றனர்.

எனவே தேவர்கள் இடம் ஆகச் சென்றதும் விஷம் தாக்க வலமாக ஓடினர். வலமாகச் சென்றதும் விஷம் தாக்க இடமாக ஓடித் துன்பப்பட்டனர்.

கயிலையை அடைந்த தேவர்கள் இறைவனின் காவலரான நந்திதேவரின் உதவியுடன் சிவபிரானிடம் தங்கள் துன்பத்தை முறையிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக் கடலான சிவபெருமான் தம் அடியவரைக் காத்து இரட்சிக்கும் பெருங்கருணையுடன் தேவர்களைக் காக்கத் திருவுளம் கொண்டார். தாம் அங்கே நின்று பணிசெய்து கொண்டிருக்கும் சுந்தரரை நோக்கி "அன்பனே! சென்று அவ்விடத்தை இவ்விடத்திற்குக்கொண்டு வருவாயாக" என்று பணித்தார்.

சுந்தரரும் இறைவன் தமக்கு இட்டபணியை நிறைவேற்ற கயிலைக்கு வெளியே ஆர்ப்பரிக்கும் விஷத்தை ஒரு நாவற்கனி வடிவில் ஒன்றுதிரட்டி எடுத்துக்கொண்டு வந்து சிவபெருமானிடம் கொடுத்தார்.

அந்த ஆலகால விஷத்தைத் தன் கையில் வாங்கிக்கொண்ட சிவபெருமான் தேவர்களைப் பார்த்து இந்த விஷத்தைத்தான் உண்டுவிடவா? அல்லது வீசி எறிந்துவிடவா? என்று கேட்க, பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த அவர்கள் இறைவா! இந்தக் கொடிய விஷத்தை வீசி எறிந்துவிட்டால் அது எல்லா உலகங்களையும் அழித்துவிடும். எனவே நீங்களே இதற்கு உகந்ததொரு வழியைச் செய்யவேண்டும் என்று வேண்டினார்கள்.

சிவபெருமான் அவ்ஆலகால விஷத்தை மகிழ்வுடன் உட்கொண்டார். அந்த விஷம் எம்பெருமானின் கழுத்தை வந்தடைந்ததும் அருகே இருந்த சிவகாமி தமது கைகளால் சிவபெருமானின் கண்டத்தை அழுத்திப்பிடித்தார். இறைவனிடம் விஷம் பரவாமல் தடுக்கவேண்டும் என எண்ணிய அம்பிகையின் செயற்பாட்டால் சிவபெருமானின் கழுத்தில் நின்ற விஷம் சிவகாமியின் திருக்கரம்பட்டதனால் அது அமுதமாக மாறி கருமணிபோல் ஆனது. அன்றுமுதல் இறைவன் "திருநீலகண்டன், நஞ்சுண்டேஸ்வரன், காளகண்டன்" என்ற திருநாமங்களுடன் அழைக்கப்பட்டார்.

இந்நிகழ்வின் பின் சிவபெருமான் தேவர்களைப் பார்த்து "நீங்கள் சென்று மீண்டும் பாற்கடலைக் கடையுங்கள். அதிலிருந்து அமுதம் வெளிப்படும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவனின் ஆணைப்படி தேவர்களும் அசுரர்களும் ஏகாதசியன்று மீண்டும் பாற்கடலைக் கடையத் தொடங்கினார்கள். அதிலிருந்து முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும் பூசித்து வழிபடுகின்ற காமதேனு, வாருணிதேவி, வாசனை மிகுந்த பாரிஜாதப்பூ தரக்கூடிய மரம், அழகுள்ள அப்சரஸ் பெண்கள், குளிர்ச்சி பொருந்திய சந்திரன், சகல ஐஸ்வரியங்களும் அருளும் மஹாலட்சுமியைத் திருமாலும் ஏனையவற்றை தேவர்களும் தங்கள் உடமையாக்கிக் கொண்டனர்.

மறுநாள் துவாதசி அன்று அதிகாலை பாற்கடலில் இருந்து அமுதம் தோன்றியது. இதனைக்கண்ட அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். தேவர் களும், அசுரர்களும் அமுதத்தைத் தாங்களே உண்ணவேண்டும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயன்றனர். இதனைக் கண்ட திருமால் திருவிளையாடல் ஒன்றைப் புரிந்தார். இறைவா நிலைதரும் அமுதினை அசுரர்கள் உண்டால் உலகத்திற்கும் தேவர் களுக்கும் பெருந்தீங்கு ஏற்படும் என்று கருதிய திருமால் ஓர் அழகிய மோகினி போல் வடிவம் எடுத்து அசுரர்களை பெண் மோகினி மேல் மயங்கவைத்து அமுதத்தைத் தேவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அமுதினை உண்டதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியினால் அவர்கள் அன்று முழுவதும் ஆடிப்பாடிப் பொழுதைக் கழித்து அமுதம் பெறுவதற்குக் காரணமான சிவபெருமானை நினைக்க மறந்தனர். அதற்கு மறுநாள் திரயோதசி அன்று தேவர்கள் அனைவரும் தங்கள் செயலுக்கு மனம் வருந்தினர். கயிலைமலையை அடைந்து இறைவனிடம் தங்கள் குறையைப் பொறுத்தருளுமாறு வேண்டி வணங்கித் துதித்தார்கள். பரமதயாளனான சிவபெருமானும் தேவர்களை மகிழ்விக்கத் திருவுளம் கொண்டு பார்வதிதேவியும் கண்டு மகிழ நந்திதேவரின் இரு கொம்புகளுக்கு நடுவே நின்று ஆனந்த நடனம் ஆடியருளினார். இவ்வாறு நந்திதேவரின் கொம்புகளுக்கிடையே சிவபெருமான் நடனமாடிய நேரமே பிரதோஷவேளையாகும். இது சனிக்கிழமை அன்று திரயோதசித் திதியில் நடந்ததாகும். எனவேதான் சனிப்பிரதோஷ விரதம் மகிமை பெறுவதாயிற்று.

# பிரதோஷ வழிபாட்டு முறையும் பலன்களும்

ஒவ்வொரு மாதமும் வருகின்ற வளர்பிறை, தேய்பிறைக் காலங்களில் வரும் திரயோதசித் திதி அன்று மாலை 4.30 - 6.00 மணிவரை உள்ள நேரத்தின் முன் நீராடி, திருநீறு தரித்து, உருத்திராட்சை அணிந்து வழிபடுவது சிறந்தது. பகல்பொழுது உணவு உண்ணாமல் பிரதோஷ பூசையை ஆரம்பித்து நந்திதேவனை வணங்கி, பின் அங்கிருந்து சண்டேசுவரரைத் தரிசித்து பின் வந்த வழியே வலப்பக்கமாகச் சென்று மீண்டும் நந்தீஸ்வரரைக் கண்டு இவருடைய இரு கொம்புகளுக்கிடையே சிவபெருமானை நினைத்து வணங்கவேண்டும்.


இந்த வாழ்வினை நிறைவுடையதாக்கிக் கொள்ளவே நாம் இறைவனை வணங்குகின்றோம். எனவே பிரதோஷ வழிபாட்டினால் கிடைக்கும் நன்மை யான பலன்களாவன.

1. நோய் நீங்கி நலம் பெறுவர்.
2. கடன் நீங்கி நலம்பெறுவதோடு, அறியாமை நீங்கி ஞானம் கிட்டும்.
3. துன்பங்கள் நீங்கி இன்பவாழ்வு பெற்றிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முத்தியடைந்திடுவர்.
5. நல்ல குழந்தைப் பாக்கியம் கிட்டும்.
6. பாவங்கள் ஒழிந்து புண்ணியம் கிட்டும்.
7. செல்வமும் வளமான வாழ்வும் கிட்டும்.




# சோமசூத்திரப் பிரதட்சணமுறை

பிரதோஷ காலத்தில் சிவாலயம் சென்று வணங்கும்போது வலம்வரும் முறைக்கு சோமசூத்திரப் பிரதட்சணமுறை என்று அழைப்பர். முதலில் சிவனையும் நந்தியையும் வணங்கி இடமாக சண்டேஸ்வரரை வழிபட்டு அப்படியே திரும்பிவந்து முன்போல் சிவனையும் நந்தியையும் வணங்கி வழமைபோல ஆலயத்தை வலமாக வந்து சண்டேஸ்வரர் ஆலயம் வரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும் நந்தியையும் வணங்க வேண்டும். இவ்வாறு மூன்றுமுறை செய்யவேண்டும். இதன்போது கோமுகித் தீர்த்தத் தொட்டியைக் கடக்காமல் சண்டேஸ்வரரை வழிபட்ட பாதையால் மீண்டும் செல்லவேண்டும். இதுவே சோமசூத்திர முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி ஞாயிறு

சைவ சமயத்தில் வார விரத நாளாக ஆவணி மாத ஞாயிற்றுக் கிழமைகள் அமைந்துள்ளன. சூரிய பகவான் ஆவணி மாதத்தில் சிங்கராசியிலே சஞ்சாரம் செய்கின்றார். ஆகவே ஆவணி மாதத்துக்குச் சிங்க மாதம் எனவும் பெயருண்டு. இதனால் ஆவணி ஞாயிறு விரத அனுஷ்டானத்துக்குரிய நாளாகின்றது.

நவநாயகர்களின் தலைமைப்பீடத்தில் இருந்து அவர்களையும், உலகையும் வழிநடத்துபவர் சூரிய பகவானேயாவார். சூரியன் உலகிற்கு ஒளியை நல்கிக் கொடுக்கின்றார். வேண்டிய வேளை களில் மழையைக் கொடுப்பவரும் அவரேயாம். இதனால் சகலஜீவ ராசிகளும் உலகிலே சீவிக்கமுடிகின்றது.

நான்கு வேதங்களும் 18 புராணங்களும் சூரிய பகவானின் அருமை பெருமைகளை விதந்துரைக்கின்றன. காலையில் ரிக் வேதத்தில் உதயமாகும். சூரியன் பகலில் யஜுர் வேகத்தில் பிரகாசித்து மாலையில் சாமவேகத்தில் அஸ்தமனமாவார் என அறிஞர் கூறுவர். இந்த மூன்று வேளைகளும் சந்தியா காலங்கள் ஆகும். ஆகவே இக்காலத்தில் சந்தியாவந்தனம், ஜபம் என்பன செய்யப்பட வேண்டும் எனச் சைவசமயத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சந்தியாகால வழிபாட்டுமுறையானது சூரிய பகவானை மனத்தால் தியானித்துக் கண்ணால் நேரிலே பார்த்துச் செய்யப் படுவதாகும். பிரத்தியட்ச தெய்வமான சூரியனைப் பார்த்தே அர்க்கியங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவை சூரியனைச் சென்று அடைவதால் அவர் திருப்தியடைகின்றார் என்பது ஐதீகம். சூரிய வழிபாட்டால் மும்மூர்த்திகளை வழிபட்ட பலன் உண்டு எனவும் கூறுவர்.

ஒரு மாதப்பிறப்பு ஞாயிற்றுக்கிழமையில் வந்து அன்று சப்தமித்திதியும் கூடி நின்றால் அன்றையதினம் விரத வழிபாட்டுக்குச் சிறந்தது. அன்றைய தினத்தில் தான, தர்மஞ் செய்தல் மிக விசேஷ மானது, விசேஷமாக நோய் நீங்கி வாழப் பிரார்த்திப்பது இந்நாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லது. கண் தலை, மூளை சம்பந்தமான நோயாளர்களுக்கு இந்த நாள் நறுபயனைக் கொடுக்கவல்லது.

ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலையில் தலையில் தோய்ந்து உலர்ந்த வஸ்திரம் அணியவேண்டும். சைவ சமயங்கூறும் சைவ அனுட்டானங்களை மேற்கொள்ள வேண்டும். அவ்வேளையில் விசேஷ அர்க்கியங்கள் சூரியனுக்குச் செய்யப்படுகின்றன. பின்னர் இரு கரங்களிலும் நீரும் சிவப்புப்பூவும் எடுத்துக்கொண்டு சூரியனைப் பார்த்தவாறு தன்னைத் தானே வலமாகச் சுற்றிவந்து சூரியனை நமஸ்கரித்துப் பூவையும் தீர்த்தத்தையும் சூரியனுக்கு அர்ப்பணிக்கவேண்டும். இப்படி 11, 16, 36, 108 முறைகள் செய்வது நல்லது. சிவப்பு, மஞ்சள் மலர்களால் அர்ச்சிக்கலாம். மாலை சாத்தலாம். கோவில்களில் சிவப்பு, மஞ்சள்நிறப் பட்டுகளைச் சாத்தி வழிபாடலாம்.

சர்க்கரைப் பொங்கல் சூரியனுக்கு மிகவும் பிடித்தமானதாகும். இதனால் சர்க்கரைப் பொங்கல் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் நைவேத்தியஞ் செய்வது சிறப்பானது. தை மாதப்பிறப்பு, சித்தரை மாதப்பிறப்பு நாட்களில் செய்யப்படுவது போன்று சர்க்கரைப் பொங்கலும் வழிபாடும் ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் இருத்தல் மிக அவசியம்.

ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு ஸ்ரீ சிவகாமி சௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ் தானத்தில் சூரிய பகவானுக்கு விசேட அபிஷேகம், பூஜை என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆவணி ஞாயிறு அன்று ஆரம்பிக்கும் ஞாயிறு விரதம் வருடம் முழுவதும் மேற்கொள்ளப்படுவது சாலச் சிறந்தது. நல்ல ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் நமக்கு நல்கும் சூரிய பகவானைத் துதிப்போமாக! நல்வாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனீஸ்வர வழிபாடு

சனீஸ்வரன் என்றதும் எல்லோரது மனத்திலும் ஒரு பயம் அல்லது பீதி தோன்றுவது இயல்பு. இதற்கான காரணம் சனிக் கிரகத்தால் ஏற்படும் கெடுதல்களேயாம். தசரதச் சக்கரவர்த்தி, நளன் ஆகிய மன்னர் பிரான்களையே ஆட்டிப்படைத்த சனி எம்மை விடவா செய்யும் என்ற ஐயம் எல்லோருக்குமே உண்டு. சிவத் தியானகரனான மார்க்கண்டேயரை யமன் அணுகியபோது சிவபெருமான் யமனையே அடித்து விரட்டியமையை நாம் இங்கு சிந்தித்தல் அவசியம். சிவத்தியானம் எல்லாவற்றிற்கும் மேலானது.

சனிக்கிரகம், சிவபூஜை செய்து சிவபெருமானின் அருள்பெற்ற அதாவது ஈஸ்வரப் பதவிபெற்ற ஒரேயொரு கிரகம் என்பதை நாம் மனதிற்கொள்ளல் அவசியம். சிவபூஜைச் சிறப்பால் சனியானவர் சனீஸ்வரன் எனப் போற்றி வழிபடப்படுகின்றார்.

"சனியைப் போலக் கொடுப்பவரும் இல்லை. சனியைப் போலக் கெடுப்பவரும் இல்லை" என்பது முதுமொழி. ஆம்! ஏழாரைச் சனி காலத்தில் ஒருவருக்குத் திருமணம் நிகழ்கின்றது. புதுமனை கிட்டுகின்றது. உத்தி யோகம், உத்தியோக உயர்வு என்பன கிடைக்கின்றன. வியாபாரத்தில் சுபீட்சம் ஏற்படுகின்றது. ஆகவே, சனீஸ்வரன் நல்லவரே. அவர் சிவ பக்தன் சித்தியானகாரர் அல்லவா? அவரை நாம் முறைப்படி ஆராதிக்கவேண்டும். வணங்க வேண்டும். அந்த வணக்கமுறைகளை ஈண்டு நோக்குவோம்.

ஒருவருக்கு ஏழாரைச் சனி, அட்டமத்துச்சனி, ஜென்மச் சனி, ராகு திசையுடன்கூடிய சனி வருங்காலங்களில் சனிக்கிரக வழிபாடுசெய்யவேண்டும் எனச் ஜோதிடர் ஆலோசனை கூறுவர். இக்காலங்களில் சனிக்கிரகத்தின் தாக்கம் உண்டு என்பது உண்மையே. இது நாம் அனுபவவாயிலாக அறிந்த விஷயம்.

எனவே சனிநீராடல் என்ற வாக்கியத்திற்கு அமைய நல்லெண்ணை யைத் தலையிலும் உடம்பிலும் சனிக்கிழமை காலையில் பூசவேண்டும். பின்னர் எலுமிச்சம்பழம், அரப்பு அல்லது சீயாக்காய் என்பவற்றைத் தலையிலும் உடம்பிலும் பிரட்டி நன்கு தோயவேண்டும். அன்று சனி விரதம் இருத்தல் முறையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலுள்ள ஒரேயொரு சனீஸ்வரன் கோவிலான திருநள்ளாற்றில் சனீஸ்வரன் வழிபாட்டிற்கு முன்னதாக நளதீர்த் தத்தில் இப்படியாகத் தலையிலே எண்ணெய் வைத்து முழுகிய பின் சனீஸ்வர வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும் அங்கேயுள்ளது. எண்ணெய் வைத்து முழுகிய பின்னர் சைவ அனுட்டானங்கள், வீட்டில் சிவபூஜை அறையில் உள்ள பூஜைகளை நிறைவேற்ற வேண்டும்.

இவைகள் நிறைவெய்தியதும் ஆலயத்துக்குச் சென்று முதலில் எள் எண்ணெய்த் தீபத்தை ஏற்றி, உடனே உரிய இடத்தில் பிரார்த்தனையுடன் வைக்கவேண்டும். எள் எண்ணெய் தீபத்துடன் வீதிவலம் வருதல், நெஞ்சுக்கு கிட்டவோ, தலைக்கு மேலோ கொண்டு செல்லக்கூடாது. இவை அபசகுணங்கள். தீபத்தை ஏற்றியவுடன் ஏனைய தீபங்களைப்போலவே இதனையும் உரிய இடத்தில் வைத்து வழிபடுதலே மேலானது. அதன்பின்பு சனீஸ்வரன் சந்நிதியை அடைந்து அங்கு நட்சத்திரம், பெயர், சொல்லி நீலப்பூ, வன்னி இலை, வில்வம் இலைகளால் அர்ச்சனை செய்யலாம். நீலம் அல்லது கறுப்பு நிறத் துணியைச் சார்த்தி மாலை அணிவித்து வழிபடலாம். எள் அல்லது நல்லெண்ணெ யைத் தானமாகக் கொடுக்கலாம். இவை சனிப் பிரீதிக்காகச் செய்யப்படுபவை ஆகும். சனீஸ்வரன் சந்நிதியில் நைவேதிக் கப்பட்ட பழம், தேங்காய் முதலானவை பிரசாதமாகக் கொடுக்கப் படுவதில்லை. சனீஸ்வரன், நவக்கிரகம் சந்நிதிகளில் பிரசாதமாகக் கொடுக்கப்படும் திருநீற்றைத் தரிக்கவேண்டும். பூவை இரு கண்களிலும் ஒற்றியபின் ஆண்கள் காதிலும் பெண்கள் தலை முடியிலும் வைக்கவேண்டும். இவைகளை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். இவை பிரசாதங்கள் ஆகும். இதன்பின்பு பிள்ளையார், சிவன் அம்மன், விஷ்ணு கடவுளரையும் ஏனைய இஷ்ட தெய்வங் களையும் வழிபடலாம். சனியோடு ராகு, கேது சம்பந்தப்பட்ட துர்க்கை, பிள்ளையார், அம்பாள், காளி முதலான கடவுளரை வழிபடலாம். கோவில் வழிபாடு முடிந்தபின் கோளாறு பதிகம், திருவாய்மொழி என்பவற்றைப் படித்தல் நற்பயனைக் கொடுக்க வல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிவிரதத்தில் காகத்துக்குச் சோறு வைத்த பின்பே மதிய போசனம் உட்கொள்வது என்பது விதி சனியின் வாகனம் காகம் அல்லவா? ஆகவே வீட்டில் சமைத்த சைவ உணவின் மேல் கறுப்பு எள்ளு அல்லது நல்லெண் ணெயை சாதத்தின் மேலே சிறிது பரப்பிக் காகத்தை அழைத்து, காகம் உண்பதைப் பார்த்த பின்பே நாம் சாப்பிடவேண்டும்.

வீட்டில் நவக்கிரக சாந்திசெய்து முடியும் வேளையில் சிவாசார்யர்கொடுக்கும்பூவுடன் கும்பங்களை மும்முறைவலம்வந்து அவற்றைக் கும்பங்களிலே போட்டு விழுந்து வணங்குதல் நமது வழிபட்டுமுறை. ஆனால் கோவில்களில் விக்கிரகங்களுக்கு நாம் பூவைப் போடலாகாது. விக்கிரகங்கள் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட மூர்த்திகள் என்பதனை நாம் கவனத்தில் இருத்துதல் அவசியம்.

சிவபெருமான ஆலகால விஷத்தை உண்டதும், பின் தேவர்களுக்கு திருநந்தியின் இரு கொம்புகளுக்கும் இடையில் நின்று திருநடனம் புரிந்ததும் சனிவார நாளிலேதான். இதனால் சனிப் பிரதோஷம் மஹா பிரதோஷமாகச் சிவபக்தர்களால் போற்றப்படுகின்றது. சனீஸ்வரனும் தலைசிறந்த சிவபக்தனே. கொழும்பு ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பிகையுடனான ஸ்ரீபொன் னம்பலவாணேஸ்வரத்தில் புரட்டாதிச் சனிவார வழிபாடு மிக மேன்மையானது. பல நூற்றுக்கணக்கான பக்தர் சனிவழிபாடு செய்கின்றார்கள். கோளறுபதிகம் படிக்கின்றார்கள், திருவாய்மொழி யையும் படிக்கின்றார்கள். மாலையில் ஸ்ரீ விஷ்ணுவிற்கு விசேட அபிஷேகம் உள்ளது. விஷ்ணுவிற்கு விசேட அபிஷேகம் உள்ளது.

புரட்டாதி மாதச் சனி வாரத்தில் சனி விரதத்தை சங்கற்பித்து ஆரம்பித்தல் நல்லது. எனவே பக்திபூர்வமான சனிவார விரதம் இருந்து கிரகப் பிரீதியுடன் மூர்த்திகளின் அருளைப்பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழக்கிரக வழிபாடு

நாம் இப்பூவுலகில் பிறக்கும்போது எமது பிறந்த நேரத்தை வைத்து எமது ஜாதகத்தைக் கணிப்பர். அந்த ஜாதகக் கணிப் பிற்கும் அதன் பலனுக்கும் அமைய நமது வாழ்வு நடக்கும். அதிலே ஏற்றம், தாழ்வு உண்டு. சுக, துக்கங்கள் இருக்கும். நோய், நொடி, வீண் அலைச்சல், கெட்ட பெயர் என்பன வந்து கொண்டேயிருக்கும். சுபீட்ச வாழ்வுகூடவரும். அதுவே ஒருவரின் பூர்வ புண்ணியம். அதனைக் கூறுவது அவரின் ஜாதகம் - கிரக அமைப்பு தெசா புத்திகள் என்பவையாகும்.

எதற்கும்குருபார்வை இருக்கவேண்டும்எனக்கூறுவர். அதாவது அவரின் பார்வை சற்றேனும் இருந்தால் ஏனைய கிரகத்தாக்கங் களினின்றும் தப்பித்துக்கொள்ளமுடியும் என்பதே அதுவாகும். குரு நல்ல இடத்தில் இருந்தால் எல்லாமே நன்மையாக அமையும். கெட்ட இடத்தில் இருப்பின் தீயதாக இருக்கும்.

ஜன்மத்து வியாழன், அட்டமத்து வியாழன், 10இல் வியாழன் இருக்கும் வேளையில் ஜாதகர் பலவித இன்னல்களுக்கு உட்படுவர். துயருறுவார். அதேவேளை இவைகளில் விலகினால் அவர் நன்மை யைப் பெறுவார்.

எனவே எம்மை ஆட்டிப்படைக்கும் இந்தக் குரு யார்? இவர் இராசி மண்டலத்தில் எல்லாக் கிரகங்களுக்கும் பெரியவர். இவரைப் பொன்னவர் என அழைப்பர். பொன் போன்ற மஞ்சள் நிறத்தவர் என்பதாகும். இவருக்கான இரத்தினக்கல் புஷ்பராகம் கடலை இவரது தானியம் மலர்களில் முல்லை மலர் இவருக்கானது. சமித்து அரசஞ்சமித்ததாகும். தனு, மீன இலக்கினங்களின் அதிபதி, புனர்பூசம், விசாகம், உத்தரட்டாதி ஆகிய நட்சத்திர நாயகரும் இவரே. ஒருவரின் மஹா திசையில் 16 வருடங்களுக்கு இவரின் சஞ்சாரம் இருக்கும்.

வியாழபகவானைத் தேவகுரு எனச் சிறப்பாக அழைப்பர். இவர் ஒருபேர் அறிஞன். கிரக அமைப்பில் வியாழபகவான் சுபக்கிரகமூர்த்தி ஆவார். வியாழ பகவானை வழிபடுவோர்க்கு அவர் மங்கள வாழ்வு, புத்திரப்பேறு, உத்தியோகம், உத்தியோக உயர்வு, வியாபார உயர்ச்சி, சௌபாக்கிய வாழ்வு எல்லாவற்றையும் கொடுக்கின்றனர். வியாழபகவானை வணங்கவேண்டும். விரதம் இருக்கவேண்டும். மஞ்சள் பட்டு, மஞ்சள் மலர்மாலையைச் சாத்தலாம். நட்சத்திரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் என்பன சொல்லி அர்ச்சிப்பது மேலானது. வியாழனுக்கு அதிபதி யார்? அவரே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஆவார். வியாழக்கிரகத் தாக்கத்தைப் போக்கி நல்வாழ்வு வரந்தரவல்லர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஆவர். சிவாலயங்களில் கோஷ்டத்தில் கல் ஆலமரத்தின் கீழ்யோக வடிவில் உள்ள மூர்த்தியே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி. ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியின் வடிவங்கள் நான்கு. யோக தக்ஷிணாமூர்த்தி. ஞான தக்ஷிணாமூர்த்தி. வீணதர தக்ஷிணாமூர்த்தி. வியாக்கியான தக்ஷிணா மூர்த்தி ஆகியவை இவரின் முகூர்த்தங்கள். கோவில்களில் யோக மூர்த்தியையே நாம் தர்சிக்கின்றோம். ஏனைய மூர்த்திகரங்கள் இந்தியாவிலுள்ள ஆலயங்களில் உண்டு. எனினும், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான கிழக்கு வாயிற் கோபுரத்தில் தென்புறத்தே நாம் இந்த நான்கு தக்ஷிணாமூர்த்தி களையும் காண முடியும்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் வலதுகை முத்திரையைக் கொண் டுள்ளது. உயிர்கள் மும்மல ஆட்சியினின்றும் விடுபட்டு இறைவனின் திருவடிகளை அடையவேண்டும் என்ற தத்துவமே அதுவாகும். சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு ரிஷி களும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் உபதேசத்தைக் கேட்டவண்ணம் உள்ளனர். அவரது வலது கால் முயலகனை மிதிக்கின்றது. தீய சக்திகள் யாவும் அழிக்கப்படவேண்டும் என்பதே அதன் தத்துவ விளக்கம் ஆகும்.

வியாழபகவானின் தாக்கம் உள்ளோர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வழிபட வேண்டும். வியாழக்கிழமை விரதம் இருப்பது மேலானது. மஞ்சள்பட்டு சாத்தி வழிபடலாம். கடலையைத் தானமாகக் கொடுக்கலாம். இவற்றோடு நட்சத்திரம். பெயர் சொல்லி அர்ச்சனை வழிபாடுகளைச் செய்வது மிக்க நல்லபயனைக் கொடுக்கும். இருப்பது மேலானது. மஞ்சள். வெள்ளைப் பூமாலைகளைச் சாத்த லாம். வெள்ளைப்பட்டு, மஞ்சள்பட்டு சாத்தி வழிபடலாம். கடலையைத் தானமாகக் கொடுக்கலாம். இவற்றோடு நட்சத்திரம், பெயர் சொல்லி அர்ச்சனை வழிபாடுகளைச் செய்வது மிக்க நல்லபயனைக் கொடுக்கும்.

இவைகளோடு "ஓம் நமசிவாய" என்ற பஞ்சாக்ஷர மந்திரத்தை அவருக்கு முன்னே இருந்து 36, 108 தடவைகள் ஜபஞ்செய்தல் உத்தமமானது. வியாழ பகவானின் தாக்கம் உள்ள காலத்தில் இந்த வழிபாடுகள் நன்மை பயக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச்செய்த

# திருவாசகம்

## திருவாசகச் சிறப்பு



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீங்கி
அல்ல லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்ஆகி பூடு ஆகி புழு வாய் மரம் ஆகி
பல் விருகம் ஆகி பறவை யாய் பாம்பு ஆகி
கல்லாய் மனிதர் ராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவர் ஆய் தேவர் ஆய்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய் யாயின எல்லாம் போய கல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்த தபால்கன்னலொடு நெய் கலந்தால் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந் துள்ளுருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்!
தாயிற் சிறந்த தயா வான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே தேனாரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்னாரியுராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வு இல்லாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண் பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உன்னார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நடம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகான் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குச்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைசிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தென்ன வெண்ணகையாய்முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெ ார்க்கு நின் றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னுமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழையங் காளனையே பாடலேலோ ரெம்பாவாய்!

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிராணாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலாமேலோ ரெம்பாவாய்!

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலாவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்!

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீர் ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வாளர்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்!

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கக் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கானும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்ததும்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடக்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளை மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடு ஆடேலோ ரெம்பாவாய்!

ஓரொக்கால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவான் சித்தங் களிகூர்
நீ ரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலோ எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோ ரெம்பாவாய்!

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
தங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீ ற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறக்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்!

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்
றங்கப் பழஞ்சென்ற புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எம்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்!

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குத் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்குழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றாமல் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

# திருப்பாவை

பெரியாழ்வார் பெற்ற பெண்கொடியாகிய ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைப் பகுதி இங்கே தரப்பெற்றுள்ளது. அன்பர்கள் நாள்தோறும் விடியற்காலையில் திருப்பாவை முப்பது பாடல் களையும் பாடுதல் நல்லது. அவ்வாறு பாடுபவர்கள் திருமாலின் திருவருளைப் பெற்று இன்புறுவர் என்று அம்மையாரே கூறியுள்ளார். ஆண்டு முழுவதும் பாடமுடியாதவர்கள்மார்கழிமாதத்திலேனும்நாள் தோறும் விடியற்காலையில் பாடுதல்வேண்டும். அதுவும் இயலாத வர்கள், அம்மாதத்தில் நாளுக்கு ஒவ்வொரு பாடல் வீதமாகவேனும் பாடுதல் பயன் தரும். திருப்பாவைப் பாடல்களின் இனிமையும், எளிமையும், அழகும் ஆழமும் நுகர்ந்து இன்புறுக்கத்தக்கன.

### தனியன்

நீளாதுங்கஸ்தநகிரிதடீ ஸுப்தமுத்போத்ய
க்ருஷ்ணம்
பாரார்த்தயம் ஸ்வம் ச்ருதி சதசிரஸ்ஸித்த
மத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா
பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்ஜ நம இதமிதம் பூய
ஏவாஸ்து பூய:

அன்னவயற்புதுவையாண்டாளரங்கற்குப்
பன்னுதிருப்பாவைப்பல்பதியம் – இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடிக்கொடுத்தசுடர்க்கொடியே! தொல்பாவை
பாடிருளவல்லபல்வளையாய்! - நாடிநீ
வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்றம்
நாம்கடவாவண்ணமேநல்கு.

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்தகண்ணியசோதையிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண்கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப்படிந்தேலோரெம்பாவாய்.

வையத்துவாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள் -
பையத்துயின்ற பரமனடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலோ நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்வோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையையு மாந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி யுகந்தேலோரெம்பாவாய்.

ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெலூடு கயலுகளப்
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி -
வாங்கக், குடம் நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிமழைக்கண்ணா! ஒன்றுநீகைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்துகோடார்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம் போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பற்பநாபன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கமுதைத் தசரதமழைபோல்
வாழவுலகினில் பெய்திடாய் நாங்களும் -
மார்கழிநீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

மாயனை மன்னுவட மதுரை மைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத்துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றுமணிவிளக்கைத்
தாயைக்குடல் விளக்கஞ்செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது
வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவானின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன்கோயில்
வெள்ளைவிளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராப் பேய்முலைநஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக்காலோச்சி
வெள்ளைத்தரவில் துயிலமர்ந்தவித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்தரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.

கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன், கலந்து -
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும்பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து
வாசநறுங்குலாய்ச்சியர், மத்தினால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓசைபடுத்த தயிராவம்கேட்டிலையோ
நாயகப்பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய்.

கீழ்வானம் வெள்ளென்றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து, உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதிதேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய்.

தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரியத்
தூபம்கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான்மகளே! மணிக்கதவம்தாள் திறவாய்
மாமீரவளையெழுப்பீரோ? உன்மகள்தான் -
ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப்பெருந்துயரில் மந்திரப்பட்டாளோ
மாமயன்மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்.

நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல்திறவாதார்
நாற்றத்துழாய்முடி நாராயணன், நம்மால் -
போற்றப்பறைதரும் புண்ணியனால், பண்டொருநாள்
கூற்றத்தின்வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில்தான்தந்தானோ
ஆற்றவனந்தலுடையாயருங்கலமே!
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர் தம்பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்து, நின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர் பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி! நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய்.

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர
நனைத்ததில்சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றிச்
சினத்தால் தென்னிலங்கைக்கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீவாய் திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்காரர்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்றுப்
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்!
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய்.

உங்கள் புகழைக்கடைத் தோட்டத்துவாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்தாம்பல் வாய்கூம்பினகாண்
செங்கல்பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதாந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும்
நங்காயெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோரெம்பாவாய்.

எல்லேயிளங்கிளியே! இன்னமுறங்குதியோ?
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லையுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக
ஒல்லை நீ போதாயுனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க -
வல்லானை, மாயானைப் பாடேலோரெம்பாவாய்.

நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய -
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண -
வாயில்காப்பானே! மணிக்கதவம்தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு, அறைபறை -
மாயன்மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப்பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேயநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய்.

அம்பரமே தண்ணீரே சோறேயஞ் செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தேகுலவிளக்கே!
எம்பெருமாட்டி! யசோதாயறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கியுலகளந்த
உம்பர்கோமானே யுறங்காதெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயுமுறங்கேலோரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்துமத களிற்றனோடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண், மாதவிப்
பந்தல்மேல் பல்கால்குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன்மைத்துனன் பேர்போடச்
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால்கட்டின்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய்! நீயுன்மணாளனை
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோரெம்பாவாய்.

முப்பத்து மூவரமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்னமென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னைநங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதேயெம்மை நீராட்டேலோரெம்பாவாய்.

ஏற்றகலங்களெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான்மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய், உலகினில் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமாய்நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
அற்றாது வந்துன்னடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய்.

அங்கண்மா ஞாலத்தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்கமிருப்பார் போல்வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போல
செங்கண் சிறுச் சிறிதேயெம்மேல் விழியாவோ
திங்களுமாதித்தியனு மெழுந்தாற்போல்
அங்கணிரண்டும் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபமிழிந்தேலோரெம்பாவாய்.

மாரிமழை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரிய சிங்கமறிவுற்றுத்தீவிழித்து
வேரிமயிர் பொங்கவெப்பாடும் தேர்ந்துதறி
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாபோலே நீ பூவைப் பூவண்ணா! உன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக், கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம்வந்த -
காரியமாராய்ந்தருளேலோரெம்பாவாய்.

அன்றிவ்வுலகமளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கைசெற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய்! புகழ் போற்றி
கன்றுகுணிலா வெறிந்தாய்! கழல் போற்றி
குன்றுகுடையாவெடுத்தாய்! குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்னுன் சேவகமேயேத்திப்பறை கொள்வான்
இன்று யாம் வந்தோமிரங்கேலோரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தி மகனாய்ப் பிறந்த ஓரிரவில்
ஒருத்தி மகனாயொளித்து வளரத்
தரிக்கிலானாகித்தான் தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்த்து மகிழ்ந்தேலோரெம்பாவாய்.

மாலே! மணிவண்ண! மார்கழிநீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன
பாலன்னவண்ணத்துன் பாஞ்சசன்னியமே
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியேவிதானமே
ஆலினிலையாயருளேலோரெம்பாவாய்.

கூடாரைவெல்லும் சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறுசன்மானம்
நாடுபுகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடேசெவிப்பூவே
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம்
ஆடையுடுப்போமதன்பின்னேபாற்சோறு-
மூட, நெய்பெய்து முழங்கைவழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாத வாய்க்குலத்து, உன்றன்னைப்
பிறவிபெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தா! உன்றன்னோ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது
அறியாதபிள்ளைகளோம், அப்பினாலுன்றன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவாநீதாராய் பறையேலோரெம்பாவாய்.

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன் -
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணும் குலத்தில்பிறந்த நீ
குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா
எற்றைக்கு மேலேழ் பிறவிக்கும், உன்தன்னோடு-
உற்றோமேயாவோமுனக்கே நாமாட் செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்.

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறைகொண்டவாற்றை அணிபுதவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பாரீரண்டுமால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்றின்புறுவரெம்பாவாய்.

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும் பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநாற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடி வாழியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த

# பெரியபுராணம் என்று வழங்கும் திருத்தொண்டர் புராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்ச்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

தண்ணனிவெண் குடைவேந்தர் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கடங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருத்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்
சொல்லுவ தறியேன் வாழி!
தோற்றிய தோற்றம் போற்றி!

வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி!
எல்லையில் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி!
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி! என்ன
நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்

சென்றகா லத்துன் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்கும் திருவரு ளுடையேம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

ஞானத்தின் திருவருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையாள் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்றபூங்கழல் போற்றி போற்றி

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோள்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தோன் அந்நாள் பரிசிவை உணந்திலேன்யான்
மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்முர்த்தி யன்றோ.

துய்யதோர் மறைகளாறுந் துதித்திடற்கரிய செவ்வேள்
செய்யபேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்டவேற் படைவாழ்கவன்னாள்
பொய்யிலை சீரடியார் வாழ்க வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கல்ய பாக்கியம் பெற பதினாறு அம்மன்களை வழிபடும் சுலோகங்கள்

## ஆதி பராசக்தி

ஆதி பராசக்தி அம்மை உமையே
தீது வராமல் காக்கும் தெய்வத்தாயே
வாது வழக்கு வம்பு தும்பு இவை நீக்கி
மாது எந்தன் மாங்கல்யம் பலம்பெற
நீதி தவறாத உந்தன் பாதம்தனில்
போது நான் பூசைகள் செய்கின்றேன்
பூமகளே பொன்மகளே அருள்வாய் அம்மா!
சங்கரி, கௌரி, கிருபாகரி, சுந்தரி, சௌந்தரி, நிரந்தரி,
சொரூபிணி, ராஜராஜேஸ்வரி, ஆதிபராசக்தி தாயே!

## காமாட்சி அம்மன்

குங்குமம் சந்தனம் சவ்வாது திருநீறில்
துலங்கிடும் தெய்வத்தாயே
சந்ததம் மிகுந்திடும் காஞ்சியில் குடிகொண்ட
சாந்த சொரூபிணியே! – எந்தன்
குங்குமம் துலங்கிட குலமகள் நீயே
அருள் மழை பொழிய வேணும்
அன்னை காமாட்சி தாயே!
முன் வினை நீக்கி எந்தன்
முன் வந்து அருள வேணும்
என் வினை போக்கி எந்தன் பூசையை
ஏற்று மகிழ வேணும்
மன்னவனருகே இடம் பெற
மாதவம் செய்யும் தாயே
உன்பதம் பணிந்தேன்
என் வரம் காக்க வேண்டும்
கண்மணி! காமாட்சி கருணைக் கடலே,
பெண்மனம் கொண்டவளே பெருமை மிகுதாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாலாட்சி அம்மன்

காசியில் குடிகொண்ட விசாலாட்சி அம்மா
காரிகை உந்தன் பாதமே பணித்தேன்
ஆதிசிவன் உடல்மீது பாதியைப் பகிர்ந்த தாயே
நீதிதவறாத கருணை நெறியாகக் கொண்ட
கோதை நீ என்று கூறிடக் கேட்டேன்
வேதனைகளை தீர்த்திட வேண்டும்
சோதனைகள் இல்லாமல் சுகவாழ்வு தந்தே
தீவினை அகற்ற வேண்டும்
மாதவம் செய்கின்றேன் எந்தன்
மாங்கல்யம் காத்திடவேண்டும்
ஆதிசக்தி அம்மையே ஆனந்த ரூபிணி
பாவமதைப் போற்றும் புனித காசி விசாலாட்சி அம்மையே
தேவரும் தினம் துதிக்கும் தெய்வத்தாயே
தேடிஉனைச் சரணடைந்தேன் அருள்வாயே

## மீனாட்சி அம்மன்

மாமதுரை நகர் சோம சுந்தரர்
மனையாட்சி புரியும் தாயே
தேன்தமிழ்ப் பாவலர்கள் சேரும்
கூடல் மாநகர் கோதை மீனாட்சி அம்மை உமையே
மேதினியில் உன்போல் கருணை கொண்டவரிலையே
மாது நீ அருளாது தீது அகன்றிடுமோ
நீதி தவறாத நின் ஆட்சி கண்டு
தேடிவந்தேன் தாயே உந்தன் பாதம்
நாடி வந்தென் அம்மா எந்தன்
கோரிக்கை ஏற்றுக் கூடிக் களிக்கும் எங்கள்
குடும்பம் தழைத்திட குலம் விளங்கிட
கொண்ட வரம் தரவேண்டும் அம்மா
கோடிதவம் இருந்து இருவர் பெறும்போது
வாடித் தவித்திடாமல் வரம் தந்தருள வேண்டும்
பாடிப் புகழ்ந்தேன் உன் பாதமே கதி என்றடைந்தேன்
கூடல்மாநகர் கோதை மீனாட்சி அம்மை உமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகிலாண்டேஸ்வரி

மலையரசி மாதரசி
மங்காத புகழரசி
மாதவத்துப் பேரரசியே
மாணிக்கத் தேரேறி
மகிழ்வாய்ப் பவனிவரும்
மங்கலத் தாயரசியே
கலையரசி கயலரசி
கனிவான மொழியரசி
கல்கண்டுச் சொல்லரசியே
காவியத் தமிழ் நெஞ்சில்
கருணையாம் நிலைதந்து
களிக்கின்ற பூவரசியே

சிலையாக நின்றாலும் சீரான வாழ்வு தரும்
செம்மை சேர் எழிலரசியே!
செவ்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து
தேவியுந் தன் அருளாசியே!
நிலையான வாழ்வுக்கு நீங்காத ஒளியூட்டும்
நெறியான தாயரசியே!
நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்
நீடுபுகழ் உலகரசியே
நத்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்
நாயகி மாதரசி நீயே!

## சிவகாமி அம்மன்

ஆட்டங்கள் ஆடியே அகிலத்தை ஆண்டிடும்
ஆனந்தவல்லி நீயே!
அழகான நாட்டிய முத்திரை நூற்றெட்டு
அமைந்திட்ட அன்னை சிவகாமியே!
பாட்டரங்கம் கொண்டு பாவலர் நாள்தோறும்
பாமாலை கோடி தருவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமாலை பாடியே பூமாலை பல சூடும்
பக்தர்கள் நாடி வருவார்
கோட்டங்கள் மண்டபம் கோபுரம் நந்தியும்
கூத்தனின் புகழ் பாடுதே
கூத்தனுடன் சக்தியும் ஆடிடும் ஆட்டத்தில்
கொடுமைகள் அழிந்தோடுதே
வாட்டங்கள் போக்கிட வந்திடும் அன்னையே
வல்லி சிவகாமி அம்மையே
வரம் வேண்டிக் கரம்கூப்பும் வறியவர் வாழ்வினை
வளமாக்கும் தேவி உமையே
அழியாத குங்குமத் திலகம் கொண்ட
அன்னை சிவகாமித் தாயே என்றும்
மகிழ்வோடு அருள் தாரும்
அம்மையே உமையே

## குமரி அம்மன்

கடல் மூன்றின் சங்கமம் கதிரவனிக் பேருதயம்
கன்னி உந்தன் ஆட்சியம்மா
கன்னியவள் மூக்குத்தி கப்பலையே காத்திட்ட
கதையுமே சாட்சியம்மா
உடல் எங்கும் சிங்காரம் ஒய்யாரச் சிற்றாடை
உள்ளத்தில் பூக்குதம்மா
ஒப்பற்ற அமுதமும் ஒளியூட்டும் குமுதவிழி
உலகத்தைக் காக்குதம்மா
இடரில்லா இன்பத்தை என்றும் தந்திடும்
இணையற்ற குமரிஅம்மா!
என்றுமே தவக்கோலம் இருந்துமே மக்களின்
இன்னலை மாற்றுமம்மா!
அடலேறு போலவே அனைவரும் வாழ்த்திட
அன்புடன் அருள்வாயே
அகிலத்தை ஆண்டிடும் கடல் கொண்ட சக்தியே
அம்மையே கன்னி உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொப்புடை அம்மன்

மஞ்சள் முகத்தழகும் மத்தியிலே பொட்டழகும்
மங்களம் தருவதன்றோ!
மாணிக்க மூக்குத்தி மரகதப் பில்லாக்கு
மகிழ்வூட்டும் அலங்காரமே!
அஞ்சனம் தீட்டிய அம்புவில் விழிகளில்
அகிலமே அடக்கமன்றோ!
அழகான காதினில் ஆடிடும் குண்டலம்
அலைகடல் முத்து வகையோ
தஞ்சமென வந்தவரைத் தாங்கிடும் கைகளில்
தவழ்ந்திடும் தங்க வளையல்
தங்கமென நெஞ்சிலே கொஞ்சிடும் மாலைகள்
தாயவளின் பொற் குவியலாம்
கொஞ்சிடும் உதட்டிலே கூடிடும் புன்னகை
கோடிக்குக் கோடி பெறுமே
குறையாத வாழ்வினை நிறைவாகத் தந்திடும்
கொப்புடை யம்மை உமையே!

## காந்திமதி அம்மன்

முல்லையுடன் மல்லிகை முத்தார அணிபூட்டி
முடிசூடும் அன்னை நீயே!
மோகனப் புன்னகை பூத்திடும் இதழ்களில்
முத்தமிழ் சிந்துவாயே!
கல்லையும் கனியாக்கும் கற்கண்டு மொழிதந்த
கண்கண்ட தெய்வம் நீயே!
கடலையும் அலையையும் காலத்திற் கிணைசொன்ன
காவியச் சோலை நீயே!
எல்லையே இல்லாத நல்லையம் பதியினில்
ஏற்றிய தீபம் நீயே!
எங்குமே இருள்நீக்கி இனியநல் அருளூட்டும்
ஈசனின் பதியும் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லைகள் மறைந்திட தொண்டுள்ளம் மலர்ந்திடத்
தூயவரம் அருளுவாயே!
தும்பிக்கை கணபதி தோகையில் முருகனுடன்
தோன்றிடும் காந்திமதியே!

## அபிராமி அம்மன்

ஆழிசூழ் உலகத்தை அன்பாலே காத்திடும்
அன்னையே அருள் நாயகி
அமுதான கடவூரில் பட்டருக்கருள் செய்த
அம்மையே புகழ் நாயகி
வேழமாய் ஒருபிள்ளை வேலோடு மறுபிள்ளை
மேன்மையாய் பெற்ற தாயே
வினைதீர்க்கும் குங்குமம் மஞ்சளில் விளங்கிடும்
வேள்வியே! கோதை நீயே!
ஏழிசை நாதத்தை எழுப்பியே மகிழ்ந்திடும்
இணையற்ற இசை வல்லியே
எங்குமே மங்கலம் பொங்கியே தங்கிட
இயங்கிடும் சக்தி நீயே!
வாழியென அன்போடு வாழ்த்திடும் சொல்லாண்டு
வாழ்ந்திடும் தமிழ் நாயகி
வளம் கூட்டும் கரும்புவில் வழங்கிடும் காட்சியே
வள்ளல் நீ அபிராமியே!

## கருமாரி அம்மன்

பூக்காட்டில் மணம் பரப்பி புகழ்க்காட்டில் வீற்றிருக்கும்
பொன்னாரம் அன்னைமாரி
புகழான திரிசூலம் புவனத்தை வாழ்விக்கும்
பொற்புடைய தேவிமாரி
வேற்காட்டில் வாழ்ந்திருந்து வேதனைகள் தீர்க்கின்ற
வெண்குடை முத்துமாரி
வித்தைபல செய்துமே சித்து விளையாடிடும்
வெற்றி நகை கொண்டமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்காட்டுச் சிந்தைதனை சாகடித்து இன்பத்தைத்
தருகின்ற பொன்னிமாரி
சக்திதனை உண்டாக்கும் சக்தியிவள் என்றுமனம்
சாற்றுகின்ற அன்னைமாரி
ஆக்கங்கள் பலகூட்டி ஆற்றல்கள் பலவூட்டி
அன்புதரும் சக்திமாரி
அழகான வேற்காட்டில் சுடராக வாழ்கின்ற
அன்னை கருமாரி உமையே!

## மாரியம்மன்

இமயத்தில் பிறந்தாலும் இதயத்தில் வாழ்கின்ற
இணையற்ற தாயமுதமே!
இல்லாமை இல்லாமல் எல்லோரும் வாழ்ந்திட
எழுந்தருளும் அருளமுதமே
சமயத்தில் வரும் இன்னல் தகர்த்திடும் அன்னையே
சமயபுர மாரியம்மா
சஞ்சலம் நீக்கிடச் செஞ்சுடர் காட்டிடும்
சக்தியே தேவியம்மா
உமையவளின் மறுவுருவாய் உலகத்தைக் காக்கின்ற
ஓங்கார வல்லி நீயே!
உன் அருளில் பிள்ளைகள் உயர்வோடு வாழ்ந்திட
உற்ற வழி சொல்லுவாயே!
அமைத்திட்ட வாழ்க்கையும் சக்கரமாய் சுற்றிட
ஆறுதல் செப்புவாயே
ஆறுதல் கூறியே மாறுதல் தருகின்ற
அம்மையே மாரியம்மையே!

## மூகாம்பிகை அம்மன்

ஏகாந்த காட்டிலே எழுத்தாகி ஒலித்திட்ட
இறையருள் கடல் முழக்கமே!
இறவாத காவியம் இனிதான ஓவியம்
எழுதிடும் மொழி முழக்கமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகாத தர்மங்கள் தருகின்ற கரங்களும்
சக்கரப் பொருள் விளக்கமே
சாந்தியும் அமைதியும் தந்திடும் மந்திரம்
சக்தியின் அருள் விளக்கமே
நோகாத உள்ளங்கள் நுண் கலை விளக்கங்கள்
நோக்கமுறத் தந்தருள்வாய்
ஆகாத செயலினால் அரும்பிடும் ஆசையை
அழித்துமே சிரித்து மகிழ்வாய்
பாங்கான சொல்லுக்கும் பண்பான செயலுக்கும்
பதியான ரதி தேவியே
பைந்தமிழ் அமுதத்தை தேனாகப் பருகிடும்
பாவையருள் மூகாம்பிகையே

## பவானி அம்மன்

உள்ளத்தின் ஆசையை ஒப்பற்ற ஓசையாய்
ஒலித்திடும் ஓங்காரியே
உலகத்தின் ஆசையை உதிக்கின்ற அருளாக
ஒளிர்கின்ற ரீங்காரியே!
பள்ளத்தில் வீழாமல் பாவங்கள் செய்யாமல்
பண்பாக்கும் சிங்காரியே!
பாசமுடன் கருணையை பாகாகக் குழைத்துமே
பசிதீர்க்கும் அலங்காரியே!
கொள்ளைகள் கொடுமைகள் இல்லாத வாழ்வுமழை
கொடுத்திடும் மின்னல் ஒளியே
கொஞ்சிடும் குழந்தைகள் கோரிடும் வரங்களைக்
கொடுக்கின்ற அன்னை விழியே!
வெள்ளையம் பாளையம் வேப்பிலை ஆலயம்
வெகுவாகப் பெற்ற தாயே!
வினைதீர்க்கும் சோலையாம் பெரியநற் பாளையம்
வீற்றிடும் பவானி உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொற்றவையம்மன்

நல்லதைச் சொல்லென்றும் நல்லதைச் செய்யென்றும்
நயம்படச் சொல்லும் தாயே!
நஞ்சுஎண்ணம் கொண்டே இச்சையாய் அலைவாரை
நசுக்கிடும் அன்னை நீயே!
பொல்லாத செயலினைப் பொடிப் பொடியாக்கிடும்
பொன் சுடர் தீபம் நீயே!
புகழுடைய வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே
பூத் தூவி வாழ்த்துவாயே
கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னை நீயே!
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே
வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக
விளங்கிடும் சக்தி நீயே!
வேண்டிடும் நல்வரம் விரைவாகத் தந்திடும்
வெட்டுடை காளியுமையே!

## துர்க்கை அம்மன்

சிங்காரச் சிற்றாடை சிகப்புநிறப் பட்டாடை
தேவியருள் திருக்காட்சியே!
சிவகெங்கைச் சிற்றூரில் சீரான அலங்காரம்
தெவிட்டாத கண்காட்சியே
மங்காத புகழுக்கும் மலர்கின்ற வாழ்வுக்கும்
மாயவளின் அருளாட்சியே!
மருவிடும் தீவினை மாய்ந்துமே மறைந்திட
மாதவளின் அரசாட்சியே!
கங்கையில் குளித்திட்டு காவிரியில் பொட்டிட்ட
காவியப் புகழரசியே!
கன்னியர் மணமாலை கனிந்துமே சூட்டிடும்
கருணை மழை பொற் காட்சியே!
மங்கள முழக்கங்கள் தங்கியே ஒலித்திடும்
மங்கையின் எழிலாட்சியே!
மலர்கின்ற புகழாரம் என்றுமே தந்திடும்
மாதேவி துர்க்கையுமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்குப் பூஜை

திருமணமாகாதபெண்களுக்கு விரைவில் திருமணமாவதற்கும் மாங்கல்யம் நிலைக்கவும் பயன்படும் இந்தப் பூஜை மிகச் சிறப்பு வாய்ந்தது.

இந்தப் பூசையை வெள்ளிக்கிழமையிலும், செவ்வாய்க் கிழமையிலும் செய்யலாம்.

இந்தப் பூசைக்கு வேண்டிய பொருட்கள் மல்லிகைப்பூ, கல்கண்டு, பழங்கள், குங்குமம், தேங்காய், கற்பூரம், நெய் முதலியன.

திருவிளக்கு பூசைக்குத் தேவையான விளக்கு பித்தளை அல்லது வெள்ளியால் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும்.

மேடை அமைத்து, அம் மேடை மீது பூக்களைத் தூவி அதன்மீது தட்டு வைத்து ஐந்துமுகத் திருவிளக்கும் இன்னொரு தட்டில் மஞ்சள் பிள்ளையாரும் வைக்க வேண்டும். பிள்ளையாருக்கு அறுகம்புல் மாலை அணிவிக்க வேண்டும். திருவிளக்குக்கு மல்லிகைப்பூ மாலை, அர்ச்சனைக்கு மல்லிகை உதிரிப் பூக்களைப் பயன்படுத்த வேண்டும்.

எக்காரணம் கொண்டும் பூசைக்குப் பயன்படும் எந்தப் பொருளும், எவர் சில்வரில் செய்ததாக இருக்கக்கூடாது.

முதலில் விநாயகரை கற்பூரதீபம் காட்டி வணங்கிவிட்டு திருவிளக்கிற்குக் கற்பூரதீபம் காட்டிவிட்டு திருவிளக்கு ஸ்தோத்திரங்களைப் பாடவேண்டும். இப்பாடல்களை தனியாகவோ எல்லோரும் சேர்ந்தோ பாடலாம்.

## திருவிளக்கு துதி

ஊன் ஆனாய் உயிர் ஆனாய்
உயிரில் ஊறும் உணர்வானாய்
வான் ஆதி ஐம்பூத
வகை எல்லாம் நீ ஆனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் ஆரும் மலர் கொன்றைச்
சிவம் என்னும் பொருளானாய்
நான் ஆனாய் உயிர்க்கு உயிரே
ஞானப் பேரொளியுமையே!

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே சீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே
பசும் பொன் விளக்கு வைத்து பஞ்சுத் திரிபோட்டுப்
குளம்போல் எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்

ஏற்றினேன் நெய்விளக்கு எங்கள் குடில் விளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன்
மாங்கல்ய பிச்சை மடிப்பிச்சை தாரும் அம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாரும் அம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாரும் அம்மா

பட்டி நிறையப் பால் பசுவைத் தாரும் அம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாரும் அம்மா
புகமுடம்பைத் தாரும் அம்மா பக்கத்தில் நில்லும்அம்மா
அல்லும் பகலும் என்றன் அண்டையிலே நில்லுமம்மா
சேவித் தெழுந்திருந்தேன் தேவிவடிவங் கண்டேன்
வச்சிரக் கிரீடம் கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்
முத்துக்கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்
பின்னலழகு கண்டேன் பிறைபோல் நெற்றிகண்டேன்
சாந்துடன் நெற்றிகண்டேன் தாயார் வடிவங்கண்டேன்
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலையசையக் கண்டேன்
கைவளையல் கலகலவென கணையாழி மின்னக்கண்டேன்

தங்க ஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாளி பீலீ கண்டேன்
மங்கள நாயகியே மனங்குளிரக் கண்டேன் அடியாள் நான்
அன்னையே அருந்துணையே அங்கிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகாபாக்யம் தாரும் அம்மா
தாயாரே உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே யுன்றன் மலரடியில் நான்பணிந்தேன்

(இந்த அகவலைப் படித்து முடித்த பிறகு கற்பூர தூபதீபம் காட்டி பதினாறுமுறை வணங்கவேண்டும். வணங்கியபிறகு)

சர்வ மங்கள மாங்கல்யே சிவே!
சர்வார்த்த சாதகே
சரண்யே திரியம்பிகே தேவி
நாராயணி நமோஸ்துதே!

(கற்பூர தூபதீபம் காட்டி வணங்கிவிட்டு கீழ்க்கண்ட அர்ச்சனை ஸ்லோகம் சொல்லி மல்லிகை மலரை திருவிளக்கின் பாதத்தில் போடவேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும் மெய்ப் பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறி வொளியாய் மிளிர்ந்தாய் போற்றி
மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி
வரம்பிலின்பமாய் வளர்ந்தாய் போற்றி
வானமாய் அருள்மழை பொழிவாய் போற்றி
இயற்கை அறிவொளியானாய் போற்றி
ஈரேழு உலகும் ஈன்றாய் போற்றி
பிறர் வயமாகப் பெரியாய் போற்றி
பேரின்பப் பெருக்காய் பொலிந்தாய் போற்றி
பொருட் கடலாம் பொருளே போற்றி
பெரியோர்க் கெல்லாம் பெரியாய் போற்றி
முடிவிலாற்றல் உடையோய் போற்றி
மூவுலகுத் தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | சிவாய | நம: |
| ஓம் | சிவசக்தியே | நம: |
| ஓம் | இச்சா சக்தியே | நம: |
| ஓம் | கிரியா சக்தியே | நம: |
| ஓம் | சொர்ண சொரூபியே | நம: |
| ஓம் | ஜோதி லெட்சுமியே | நம: |
| ஓம் | தீப லெட்சுமியே | நம: |
| ஓம் | மகா லெட்சுமியே | நம: |
| ஓம் | தனலட்சுமியே | நம: |
| ஓம் | தான்ய லெட்சுமியே | நம: |
| ஓம் | தைரிய லெட்சுமியே | நம: |
| ஓம் | வீர லெட்சுமியே | நம: |
| ஓம் | விஜய லெட்சுமியே | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | வித்யா லெட்சுமியே | நம: |
| ஓம் | ஜெய லெட்சுமியே | நம: |
| ஓம் | வர லெட்சுமியே | நம: |
| ஓம் | கெஜ லெட்சுமியே | நம: |
| ஓம் | காம வல்லியே | நம: |
| ஓம் | காமாட்சி சுந்தரியே | நம: |
| ஓம் | சுப லெட்சுமியே | நம: |
| ஓம் | ராஜ லெட்சுமியே | நம: |
| ஓம் | கிரக லெட்சுமியே | நம: |
| ஓம் | சித்த லெட்சுமியே | நம: |
| ஓம் | சீதா லெட்சுமியே | நம: |
| ஓம் | திரிபுர லெட்சுமியே | நம: |
| ஓம் | சர்வ மங்கள காரணியே | நம: |
| ஓம் | சர்வ விக்ந நிவாரணியே | நம: |
| ஓம் | சர்வாங்க சுந்தரியே | நம: |
| ஓம் | சௌபாக்கிய லெட்சுமியே | நம: |
| ஓம் | நவக்கிரக தாயினியே | நம: |
| ஓம் | அண்டர் நாயகியே | நம: |
| ஓம் | அலங்கார நாயகியே | நம: |
| ஓம் | ஆனந்த சொரூபியே | நம: |
| ஓம் | அகிலாண்ட நாயகியே | நம: |
| ஓம் | பிரம்மாண்ட நாயகியே | நம: |
| ஓம் | எனும் சிற்பரத்தாளே | நம: |

அபாய மறுக்கும் அறுகோணத்தி
சொற்பவணத்தி சூக்ஷ்ம ரூபி
சரணம் சரணம் தாள்பணிந்தேனுனை
பாவம் பொறுத்து மாங்கல்ய பாக்கியம் தந்து
விக்கினங்கள் வராமல் வேலிபோலக் காத்து
ஆதரித்தெனக்கு அருள்புரிவாயே
புவன சுந்தரி போற்றி வணக்கம்
குருவடியாய் வந்து உபதேசங்கள்
கொடுத்துன் திருவடி தந்தருள்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி பாடல்கள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறும் பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்
மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.

- பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்து
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலுங் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரகௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தரமுகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனை கூறுபோட்டவளே
அசுரர்குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை யற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தித் தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகாதேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக்கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனற்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.
'அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

ப்ரமஹ்ஹ்மாமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்!
ஜனமஜ துஃக வினாசக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

தேவமுனி ப்ரவரார்சித லிங்கம்
காமதஹன கருணாகர லிங்கம்!
ராவண தர்ப வினாசக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

ஸர்வ ஸுகம்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்தன காரண லிங்கம்!
ஸித்த ஸுராஸுர வம்தித லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்!
தக்ஷ ஸுயஞ்ன னினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்!
ஸஞ்சித பாப வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகணாசித ஸேவித லிங்கம்
பாவை-ர்பக்திபிரேவ ச லிங்கம்!
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வஸ முத்பவ காரண லிங்கம்!
அஷ்டதரித்ர வினாசன லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்சித லிங்கம்!
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்-ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்!!

லிங்காஷ்டமித புண்யம் படேஸ்ஸிவ ஸன்னிதௌ!
ஸிவலோகமவாப்னோதி ஸிவேன ஸஹ மோததே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமியந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே. 1

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே. 2

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 7

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி விந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னினை யாரணத்தோன்
சுந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே. 8

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே. 9

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொான்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்றதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவ ளேபுவனம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரத்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே. 13

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ள
பந்திப் பவரழி யாப்பர் மானந்தார் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே. 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்தார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு
மொளியே யொளிரு மொளிக்கிட மே யெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
யளியே னறிவள விற்கள வான ததிசயமே. 16

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோமாவ பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானத் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வொளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறைகின்ற நின்றிருக் கோயிலின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ் சமோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கலை சம்முலை யாண்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயி றாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

கொடியே யினவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேயனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் கனியே யளியவென் கண்மணியே. 23

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமார் பெருவிருந்தே
பனியிலே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்று மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே. 25

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
னாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நடையுடைத்தே. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்று
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
படைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரகஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே. 28

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியுஞ் சக்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய் கொண்டதல்ல வென்கை
நன்றே யுனக்கினி நானென் செயினு நடக்கட லுட் வென்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே. 30

உமையு முமையொரு பாகரு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே. 31

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாங்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே. 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தே சரணம் புகுமுடி யாருக்கு வானுலகத்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே. 34

திங்கட் பசுவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய லாவெண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியனை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தொரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிக்கையே. 36

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே. 37

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயுதம் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குத் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே. 38

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே. 39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியதைப்பேதை நெஞ்சிற்
காணுதற் கண்ணிய னல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றேமுன்செய் புண்ணியமே. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பதம் பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுதி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டிறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லிரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின் சொற்
றிரிபுர சுந்த சிந்துர மேனிய ளைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினா
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந்
துவளே னியொருதெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.45

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.46

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிரும் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே. 48

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கண்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே. 51

வையுந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்காண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனிந்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னிலும் வேண்டுவதொன்றிலையே. 55

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே. 56

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமா லையுங் கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணாம் புயமுலைத் தையனல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமுங் கராம்புயமுஞ்
சரணாம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினுஞ் சொல்லினி யாப்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையுமிங் கொருபொரு ளாகநயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய் நின்னை யுள்ள வண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே. 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே. 62

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கத்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே. 65

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்திரு நாமங்க டோத்திரமே. 66

தோத்திரஞ் செய்து தொழுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலங்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே. 67

பாரும் புனலுங் கனலும்வெறுங் காலும் படர் விசும்பு
மூரு முருகு சுவையொளி யூறொலி யொன்னுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபி ராமி கடைக்கண்களே. 69

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல்வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலக்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்(கு) ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேஇரங் கேல்உனக்(கு) என்குறையே. 71

என்குறை தீரநின்(று) ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழு(து) எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்(கு) ஒளி செம்மையம்மை
நாமம் திருபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தருவின் நிழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியைப் மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரா(ன்) ஒருகூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தே(ன்) என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்(டு) எமக்(கு) அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே. 79

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றதா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோ(டு)
இணங்கேன் என(து) உன(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன் றிலேன்என்கண் நீவைத்த பேரளியே. 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்ட மும்நின்
ஒளியாய் நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுந்தொறும்
களியாகிஅந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்கு செம்பட்(டு) உடை யாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநு ண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறை வண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்புஎன் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகம்கொண் டாளும் பராபரையே. 87

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தாமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போ(டு) உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்(து)
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே. 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும்செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

நகையே இதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடு விரும்புவதே. 93

விரும்பித் தொழும்அடி யான்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
கரும்பிற் களித்து மொழிநடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்(று) அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கடலே இம வான்பெற்ற கோமளமே. 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலானை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதியரே. 96



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்து ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறி யாமடப் பூங்குயிலே. 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா கலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்(கு) அன்(று) இமவான் அளித்த கனங்குழையே. 99

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும் உதிக்கின்றவே. 100

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழு வார்க்(கு)ஒரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ! ஓம் சரவணபவ! ஓம் சரவணபவ!

# கந்த சஷ்டி கவசம்



**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த குமரன்
அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலையங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் ரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவரை பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் அருள் பெற

ராம நாமப்பிரியா ஆஞ்சநேயா
ராம தாஸநு தா ஆஞ்சநேயா
அனுமந்த வுரா ஆஞ்சநேயா
வாயு குமாரா ஆஞ்சநேயா
வான ரோத்தமா ஆஞ்சநேயா
மாருதி தேவா ஆஞ்சநேயா
மகானு பாவா ஆஞ்சநேயா
ஆஞ்சநேயா ராம நாமப்பிரியா
ஆஞ்சநேயா பல பீமா
அஞ்சனை புத்திரா ஆஞ்சநேயா
ரகுராமப்பிரியா ஆஞ்சநேயா
தேவ தேவா ராம தாஸா
ராமர் பாதமே ஆசனபீடம்
ராமர் பணியே வாழ்வின் லட்சியமே
ராம நாமமே உயிர்மூச்சு
ராமர் பாடலே ஆனந்த சங்கீதம்
ராம ராம ராமா ராமஜெயம்

**- பாலசூரியன்**

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாராக ஆசிரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலர் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைப்பான் அவன் நம்மை அளித்து காப்பான்

**- கம்பர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் துதிப்பாடல்கள்

சாமிசாமி ஐயப்பா சபரிமலை ஐயப்பா
சபரிமலை ஐயப்பா சரஸ்தாவே ஐயப்பா (சாமி சாமி)

அச்சன்கோவில் அச்சனய்யா சாமிசாமி ஐயப்பா
ஆதரிக்க வேணுமய்யா சபரிமலை ஐயப்பா
ஆரியங்காவு ஐயாவே சாமிசாமி ஐயப்பா
ஐயனாக வந்தவரே சபரிமலை ஐயப்பா (சாமிசாமி)

குளத்துப்புழை பாலகரே சாமிசாமி ஐயப்பா
குறையெல்லாம் நீக்கவேணும் சபரிமலை ஐயப்பா
எரிமேலி சாஸ்தாவே சபரிமலை ஐயப்பா
எங்களையும் காக்கவேணும் சபரிமலை ஐயப்பா (சாமி சாமி)

பம்மைநதி தீரத்திலே சாமிசாமி ஐயப்பா
பாவங்களைப் போக்கவேணும் சபரிமலை ஐயப்பா
நீலிமலை ஏற்றத்திலே சாமிசாமி ஐயப்பா
நிற்கவைத்துப் பார்க்கிறியே சபரிமலை ஐயப்பா (சாமி சாமி)

அப்பாச்சி மேட்டினிலே சாமிசாமி ஐயப்பா
திணறவைத்துப் பார்க்கிறியே சபரிமலை ஐயப்பா
சரங்குத்தி ஆலடைந்து சாமிசாமி ஐயப்பா
சன்னிதானம் வந்தடைந்தோம் சபரிமலை ஐயப்பா (சாமி சாமி)

மணிகண்டா மணிகண்டா
மாமலை வாசா மணிகண்டா
ஹரிஹர சுதனே மணிகண்டா
ஆனந்த மூர்த்தியே மணிகண்டா
காந்த ஜோதியே மணிகண்டா (மணி)

காட்சி யளிப்பாய் மணிகண்டா
நம்பினோர்க்கும் மணிகண்டா
நம்பாதவர்க்கும் துணையுண்டாம்
இன்பம் கொடுக்கும் மணிகண்டா
இன்னல் தீர்க்கும் மணிகண்டா
எரிமேலி சாஸ்தா மணிகண்டா
எங்கும் நிறைந்த மணிகண்டா (மணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் தீர்க்கும் மணிகண்டா
துறவற வாசியே மணிகண்டா
வாபரு நேசா மணிகண்டா
வரம் கொடுக்கும் மணிகண்டா
சபரி கிரீசா மணிகண்டா (மணி)

சாஸ்தாவே குருவே மணிகண்டா
பதினெட்டாம் படியே மணிகண்டா
பக்தரைக் காக்கும் மணிகண்டா (மணி)

பவனி வராரிங்கே சுவாமி சரணம் ஐயப்பா
வாவர் சுவாமி கூட வாரார் சரணம் ஐயப்பா
காவலர்கள் கூட வாரார் சரணம் ஐயப்பா
ஆவலோடு கூப்பிடுவோம் சரணம் ஐயப்பா

அம்பும் வில்லும் கையிலேந்தி சுவாமி வருகிறார்
எம்பெருமான் துள்ளித்துள்ளி ஆடி வருகிறார்
துன்பமெல்லாம் தீர்த்திடவே பவனி வருகிறார்
இன்பமோடு கும்பிடுவோம் சரணம் ஐயப்பா (பவனி)

தந்தை தாயுமான சுவாமி பவனி வருகிறார்
வேதியர் சபை நடுவே சுவாமி பவனி வருகிறார்
பூதப் படைகளுடன் ஐயன் வருகிறார்
இத்தருணம் காத்திடுவாய் சரணம் ஐயப்பா (பவனி)

கடகடவென பேரி முழங்க சுவாமி வருகிறார்
கொட்டு வாத்தியம் முழங்கிவரவே ஐயன் வருகிறார்
மாடன் சடயன் பொருளன் இருளன் சரணம் ஐயப்பா
ஓடிவரவே பவனி வருகிறார் சரணம் ஐயப்பா (பவனி)

மின்னல்போல் ஒளி விளங்க சரணம் ஐயப்பா
பொன் மேனி கண்டிடவே சரணம் ஐயப்பா
தனிச் சிலம்பும் சல்லடையும் சுவாமி ஐயப்பா
கனகன வென சலங்கை குலுங்க பவனி வருகிறார் (பவனி)

பிள்ளைக் குறையால் உள்ளம் நொந்து வருந்தும் பக்தரை
உள்ளமிரங்கி கருணை காட்டி பாரும் ஐயப்பா
வள்ள லென்று பெயர் விளங்குத் எங்கள் ஐயப்பா
அள்ளியள்ளி யேகிடுவாய் செல்வக் குவியலை (பவனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்பிணியின் கொடுமையினால் வருந்தும் அன்பரை
நொடிப்பொழுதில் பிணியகற்றி காத்தருள் அய்யா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா (பவனி)

அய்யனே நின் சரணம் மனோஹரா
மெய்யனே நின் சரணம்
துன்பத்தை நீக்கி எங்கள் பக்தியால்
இன்பத்தை தந்திடுவாய் (அய்ய)

மஹிஷி மர்த்தனே மணிகண்ட
மணிமய பூஷண
மோஹமெல்லாம் அகற்றி அனுதினம்
அல்லல் ஒழித்திடுவாய் (அய்ய)

கார்த்திகை ஒன்றாம் நாளில் ஸ்வாமியின்
முத்திரை தரித்திடுவோம்
காடுமலை தன்னிலே அன்பர்கள்
கஷ்டம் துலைத்திடுவாய் (அய்ய)

எரிமேலி சாஸ்தா சபரீஸா
சரணமய்யப்பா
எம்பிரானைம் துதிப்போம் ஸ்வாமியே
எங்கள் வினை தீர்ப்பாய் (அய்ய)
அழுதையில் மூழ்கி ஸ்வாமி
கல்லும் எடுத்தேனே
கரிமலை கடினம் ஐயப்பா
காத்து ரட்ஷித்திடுவாய் (அய்ய)

பம்பையில் தீர்த்தனே பகவான்
பாதம் பரமானந்தம்
பாபம் அகன்றிடவே
போற்றிப் பணிந்திடுவோம் (அய்ய)
கணபதி பகவான் ஸ்வாமி
சரணமய்யப்பா
மாளிகப் புரத்தம்மா தேவி
மஞ்சமாதா சரணம் (அய்ய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரி கிரிஸா சரண
சாந்தி யளித்திடுவாய்
சரணம் நீ கதியே ஸ்வாமி
சாஸ்வத பிரும்மம் நீயே (அய்ய)

ஓம் ஓம் ஐயப்பா
ஓம் குருநாத ஐயப்பா
அரனார் பாலா ஐயப்பா ஓம் ஓம்
அம்பிகை பாலா ஐயப்பா ஓம் ஓம்
ஆபத்பாந்தவா ஐயப்பா ஓம் ஓம்
ஆதி பராபரா ஐயப்பா ஓம் ஓம்
இருமுடிப் பிரியா ஐயப்பா ஓம் ஓம்
இரக்கம் மிகுந்தவா ஐயப்பா ஓம் ஓம்
ஈசன் மகனே ஐயப்பா ஓம் ஓம்
ஈஸ்வரி மைந்தா ஐயப்பா ஓம் ஓம்
உமையாள் பாலா ஐயப்பா ஓம் ஓம்
உறுதுணை நீயே ஐயப்பா ஓம் ஓம்
ஊக்கம் தருபவா ஐயப்பா ஓம் ஓம்
ஊழ்வினை அறுப்பவா ஐயப்பா ஓம் ஓம்
எங்கும் நிறைந்தவா ஐயப்பா ஓம் ஓம்
எங்கள் நாயகா ஐயப்பா ஓம் ஓம்
பம்பையின் பாலா ஐயப்பா ஓம் ஓம்
பந்தள வேந்தே ஐயப்பா ஓம் ஓம்
வன்புலி லிருப்பவா ஐயப்பா ஓம் ஓம்
வனத்தி லிருப்பவா ஐயப்பா ஓம் ஓம்
சபரி கிரீசா ஐயப்பா ஓம் ஓம்
சாந்த சொரூபா ஐயப்பா ஓம் ஓம்
சாகவதரூபா ஐயப்பா ஓம் ஓம்
என்ன மணக்குது எங்கே மணக்குது?
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே!
அத்தரும் ஐவ்வாதும் எங்கே மணக்குது?
ஹரிஹர புத்திரன் மேலே மணக்குது!
அல்லி மலர் வாசமது எங்கே மணக்குது?
ஹரிஹர சுதனின் மேலே மணக்குது!
நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைந்து நினைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பிய நெஞ்சு ததும்பியதே!
உகந்து மகிழ்ந்து மொழிந்த இலக்கினில்
உள்ளம் இணைந்து கலந்ததுவே!
திகழ்ந்து விளங்கு திருச்சபை நாயகன்
திருவருள் எங்கும் மலர்ந்ததுவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா
திருவடி சரணம் சரணமய்யா!

இனியொரு பகையிலை துயரிலை மூப்பிலை
ஏக்கமும் தேக்கமும் வாழ்விலி(ல்)லை!
தனியொரு துணையென அருகினில் நீ வரச்
சத்தியம் சத்தியம் தோல்வியி(ல்)லை!
தினமும் எம் அறிவும் உடம்பும் செழித்திடும்
தீவினை நோய்நொடி ஏதுமி(ல்)லை!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா
திருவடி சரணம் சரணமய்யா!

கிங்கிணி தண்டை சிலம்பொடு பட்டம்
கிரீடம் அணிந்தவன் வாழியவே!
மங்கல அந்தணன் மஹி? குலாந்தகன்
மகர விளக்கினன் வாழியவே!
தெங்கு நிரம்பி வழிந்திடும் நெய்யினில்
சிந்தை குளிர்ந்தவன் வாழியவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா
திருவடி சரணம் சரணமய்யா!

இருவினை பொடிபட எமதிடர் விலகிட
அருளிய பாதமலர் வாழியவே!
ஒருமுறை இருமுறை பலமுறை வழிபட
உதவிய கருணையும் வாழியவே!
திருமலி நெடுமலை தரு மலர் கனை எழில்
எனும் இவை யாவையும் வாழியவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா
திருவடி சரணம் சரணமய்யா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் படிப்பாடல்கள்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஐந்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினொன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பன்னிரண்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினான்காம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா

திருப்படி பதினெட்டாம் சரணம் பொன்னய்யப்பா
சுவாமி பொன்னய்யப்பா ஐயனே பொன்னய்யப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னய்யப்பா
இரவில் நடை சாத்தும்போது
பாடப்படும் சாஸ்தா அஷ்டகம்

ஹரிவராஸனம் ஸ்வாமி விச்வ மோஹனம்
ஹரிததீஸ்வரா ராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் ஸ்வாமி நித்ப நர்த்தனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

சரண கீர்த்தனம் ஸ்வாமி சந்தமானசம்
பரண வோலுபம் ஸ்வாமி நர்த்தனாலயம்
அருண பாசுரம் ஸ்வாமி பூதநாயகம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

ப்ரணய சத்யகா ஸ்வாமி ப்ராண நாயகம்
ப்ரணக் கல்பகம் ஸ்வாமி சுப்ரபாஞ்சிதம்
ப்ரணவ மந்திரம் ஸ்வாமி கீர்த்தன ப்ரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

துரக வாகனம் ஸ்வாமி ஸஜூந்தரானனம்
வரகதாயுதம் ஸ்வாமி வேதவர்ணிதம்
குருக்குருபாகரம் ஸ்வாமி கீர்த்தனப்ரியம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

த்ரிபுவனார்ச்சிதம் ஸ்வாமியே தேவதாத்மகம்
த்ரிநயனப்புரம் ஸ்வாமிதிவ்ய தேசிகம்
த்ரிதஸ பூஜஜூதம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவபயபஹர ஸ்வாமி யாவு காவுகம்
புவன மோகனமம் ஸ்வாமி பூதிபூஷணம்
தவள வாரணம் ஸ்வாமி திவ்ய வாகனம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

கனம்ருது ஸ்மிதம் ஸ்வாமி ஸஜூந்தரானனம
களப மோமளம் ஸ்வாமி காத்யமோகனம்
களப கேசரி ஸ்சாமி வாஜி வாஹானம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

ச்ரிதஜனப்ரியம் ஸ்வாமி சிந்திதப்ரதம்
ச்ருதி விபூஷணம் ஸ்வாமி ஸாது ஜஜூவனம்
ச்ருதி மனோகரம் ஸ்வாமி கீதலாலசம்
ஹரிஹராத்மஜம் ஸ்வாமி தேவமாச்ரயே.

சரணம் ஐயப்பா சுவாமி சரணமய்யப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணமய்யப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனைப் பாடல்கள்

## பிள்ளையார் பாடல்

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திரே
அரச மரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

யானை முகம் கொண்டவர்
ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர்
பக்தர் குறையைத் தீர்ப்பவர்

மஞ்சளிலே செய்யினும்
மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்
ஆறுமுக வேலனுக்கு
அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும்
நீக்கி வைக்கும் பிள்ளையார்

அவல் கடலை சுண்டலும்
அரிய மோதகங்களும்
கவலையின்றித் தின்னுவார்
கருணைமாரி பொழிகுவார்

கலியுகத்து விந்தைகளைக்
காணவேண்டி அனுதினம்
எலியின் மீது ஏறியே
இஷ்டம் போலச் சுற்றுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம்மூன்றும் ஆறாக வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதம்ஊன்றும் அருந்தவர்க்கும் பதம்மூன்று
கடந்தபதம் பாலிப் பானை

விதம்மூன்று புரம்கடிந்தார் அளித்துஅருளும்
ஒருமுதலை வேரோ டேசஞ்
சிதம்மூன்று பிறப்புஒழிக்கும் ஆனைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்போம்

**- சைவஎல்லப்ப நாவலர்**

தழைவிரி கடுக்கை மாலைத்
தனிமுதல் சடையில் சூடும்
குழவிவெண் திங்கள் இற்ற
கோட்டது குறை என்று எண்ணிப்
புழைநெடும் கரத்தால் பற்றிப்
பொற்புற இணைத்து நோக்கும்
மழைமதக் களிற்றின் செய்ய
மலரடி சென்னி வைப்பாம்

**- அதிவீரராமபாண்டியன்**

மும்மைப் புவனம் முழுதுஈன்ற
முதல்வி யோடும் விடைப்பாகன்
அம்மை தருக முத்தம் என
அழைப்பு ஆங்கே சிறிது அகன்று,
தம்மில் முத்தம் கொள, நோக்கிச்
சற்றே நகைக்கும் வேழமுகன்
செம்மை முளரி மலர்ந்தாள், எம்
சென்னி மிசையில் புனைவாமே.

**- நந்திக்கலம்பகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி கணபதி பாலயமாம் கௌரீ தனயா பாலயமாம்
கௌரீ நந்தன கஜவதனா கணேச வரதா மாம் பாஹி
கஜமுக கஜமுக கணநாதா கணேச வரதா மாம் பாஹி
கஜானனா ஓம் கஜவதனா கஜமுக வரதா கஜானனா
மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா
சாமர கர்ண கஜானனா விளம்பித ஸூத்ரா கஜானனா
வாமன ரூபா கஜானனா மஹேச்வர புத்ரா கஜானனா
விக்ன விநாசக கஜானனா பாத நமஸ்தே கஜானனா
பக்தஜன ப்ரிய கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
பாஹி பாஹி கஜானனா பார்வதி நந்தன கஜானனா

அள்ளித்தரும் பிள்ளையாரை கும்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே
அள்ளித்தரும் பிள்ளையாரை கும்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே
கள்ளமில்லா உள்ளத்தோடு வாழ்ந்திருப்போமே
மூன்று காலாத்தையும் ஆள்பவனை சார்ந்திருப்போமே
கள்ளமில்லா உள்ளத்தோடு வாழ்ந்திருப்போமே
மூன்று காலாத்தையும் ஆள்பவனை சார்ந்திருப்போமே
அள்ளித்தரும் பிள்ளையாரை கும்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே

ஊர்தோறும் தெருவெல்லாம் வீற்றிருப்பவன்
தினம் உழைப்போர் தம் குறைகளையே மாற்றிவைப்பவன்
ஊர்தோறும் தெருவெல்லாம் வீற்றிருப்பவன்
தினம் உழைப்போர் தம் குறைகளையே மாற்றிவைப்பவன்

பார் முழுதும் பலவடிவம் ஏற்றிருப்பவன்
பார் முழுதும் பலவடிவம் ஏற்றிருப்பவன்
ஆழிப் பை நாக பள்ளியானின் மூத்த மருமகன்
அள்ளித்தரும் பிள்ளையாரை கும்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தந்தைதான் நமக்கு உலகம் என்றவன்
மந்திர ஆசார நியமங்களின் அப்பாற்பட்டவன்
அன்னை தந்தைதான் நமக்கு உலகம் என்றவன்
மந்திர ஆசார நியமங்களின் அப்பாற்பட்டவன்

என்ன வைத்து கும்பிட்டாலும் ஏற்றுக்கொள்பவன்
என்ன வைத்து கும்பிட்டாலும் ஏற்றுக்கொள்பவன்
அரளி அருகம் புல்லில் எழுந்து நிற்பவன்

அள்ளித்தரும் பிள்ளையாரை கும்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே
கள்ளமில்லா உள்ளத்தோடு வாழ்ந்திருப்போமே
மூன்று காலத்தையும் ஆள்பவனை சார்ந்திருப்போமே

அள்ளித்தரும் பிள்ளையாரை கும்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே
அந்த ஆனை முகன் திருவடிகள் நம்பிடுவோமே.

**சிவன் பாடல்**

அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத்தேன் அருள்விருந்தே

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம் புகழ் கண்ணியனே

மலைதரு மகனே மடமயிலே
மதிமுக அமுதே இளங்குயிலே

ஆனந்தக் கொடியே இளங்குயிலே
அற்புதத்தேன் மாலைமானே

சிவசிவ சின்மய தேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சித பாதா

தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா

**கிருஷ்ணர் பாடல்**

திருப்பதிமலைமேல் இருப்பவனே
தீராத வினையெல்லாம் தீர்ப்பவனே
ஸ்ரீனிவாசா கோவிந்தா ஸ்ரீவெங்கடேச கோவிந்தா
உள்ளமாம் கோவில் இருப்பவனே
உலகோரை வாழ்விக்க வந்தவனே
சங்கடம் தவிர்த்திடும் கோவிந்தா
வெங்கட ரமணா கோவிந்தா
ஏழுமலைமேல் இருப்பவனே
எல்லா வினைகளையும் தீர்ப்பவனே
கிஸ்ணாராமா கோவிந்தா
ஹரிராமா கிஸ்ணா கோவிந்தா
ஏழுமலைமேல் இருப்பவனே
ஏழைகள் துயரம் தீர்ப்பவனே.

கோபியரே கோபியரே, கொஞ்சும் இளம் வஞ்சியரே!
கோவிந்தன் பேரைச் சொல்லி, கும்மி கொட்டி ஆடுங்களே!

வேங்கடத்து மலைதனிலே,வெண்முகிலாய் மாறுங்களே!
ஸ்ரீரங்கக் காவிரியில் சேலாட்டம் ஆடுங்களே!
(கோபியரே கோபியரே)

நந்தகுமார் மெல்லிசையில் நடனமிடும் தோகைகளே!
பந்தமுள்ள திருமழிசைப் பறவைகளாய் மாறுங்களே!

சிந்துமணி வைரநகை ஸ்ரீராமன் பிம்பம் அவன்!
மந்திரம் சேர் திருமாலின் மறுவடிவத் தோற்றம் அவன்!
(கோபியரே கோபியரே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிமழைக் கண்ணன் அவன், அழகுநகை மன்னன் அவன்!
தாழை இலை பயிரினைப் போல், தானுறையும் வண்ணன் அவன்!

நாடிவரும் அன்னையர்க்கு நவநீத கிருஷ்ணன் அவன்
நந்தகுல யாதவர்க்கு, ராகவ பாலன் அவன்!!
(கோபியரே கோபியரே)

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ
அவன் வாய் நிறைய மண்ணை உண்டு மண்டலத்தை காட்டியதில்
ஓய்வெடுத்து தூங்குகின்றான் ஆராரோ
ஓய்வெடுத்து தூங்குகின்றான் ஆராரோ
ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ

பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ
பின்னலிட்ட கோபியரின் கன்னத்திலே கன்னமிட்டு
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ

அந்த மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே இவன் உறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ

நாகபடம் மீதில் நர்த்தனங்கள் ஆடியதில்
தாகமெல்லாம் தீர்துகொண்டான் தாலேலோ
நாகபடம் மீதில் நர்த்தனங்கள் ஆடியதில்
தாகமெல்லாம் தீர்துகொண்டான் தாலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மோகநிலை கூட ஒரு யோகநிலை போலிருக்கும்
யாரவனை தூங்கவிட்டார் ஆராரோ
யாரவனை தூங்கவிட்டார் ஆராரோ

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ

கண்ணனவன் தூங்கிவிட்டால் காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரீரோ
கண்ணனவன் தூங்கிவிட்டால் காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரீரோ

அவன் பொன்னழகை காண்பதற்கும் போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ

ஆனந்த சாகரா முரளீநாதா
மீராப்ரபு ராதே ஸ்யாமா வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் வேணு கோபாலா

ஆவோ கோபால் நந்தலால்
ஆவோ நந்த முகுந்த கோபால்
கிருஷ்ண கோபால் சாயி கோபால்
ஆவோ ஆவோ நந்த துலார்
ஹே மது சூதன மதன கோபாலா
ஆவோ கிரிதர சுந்தரலால்.
ஆவோ கோபாலா கிரிதாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவோ ஆவோ அந்தர்யாமி
ஆவோ ஆவோ ஆனந்த சாயி
ஆவோ ஆவோ ஆத்மநிவாசி
ஆவோ ஆவோ சாந்தி நிவாசி
கண ஸ்யாமா சுந்தரா
பன்சீதர ஹேகிருஷ்ண கனையா
தூ ஹி மேரே மா பாப்பையா
தேவகி தனயா ஹே தந்தலாலா
தீன பாந்தவா துவாரகா நாதா
ராதா ஹ்ருதய நிவாசா ஹரே கிருஹ்ணா
மது சூதனா முரளீ தரா
பர்த்தீஸ்வரா சத்ய சாயீஸ்வரா.

கமல நயன ப்ரபு கமலா பதே
கமலாசன ப்ரபு கமலா காந்தா
கமல நாத ப்ரபு கமலா ரமணா
கமலேஸ்வர ப்ரபு கமலா நாதா.
கல்யாண க்ருஷ்ணா கமனீய க்ருஷ்ணா
காளிங்க மர்த்தன ஸ்ரீ க்ருஷ்ணா
கோவர்த்தன கிரிதாரி முராரி கோபி மனசஞ்சாரி
பிருந்தாவனகே துளசீமாலா
பீதாம்பர தாரி மராரி.

கஸ்தூரி ரங்கா காவேரி ரங்கா
ஸ்ரீ ரங்க ரங்கா ரங்கா
கல்யாண ரங்கா கருணாந்த ரங்கா
ஸ்ரீ ரங்க ரங்கா ரங்கா
கருட கமனரங்கா ஹோசசயன ரங்கா
ஸ்ரீ ரங்க ரங்கா ரங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா
ஹரே கிருஷ்ணா ஜெய்
சாயி கிருஷ்ணா ஜெய்
சொல்லுங்கள் சொல்லுங்கள்
சாயி நாமம் ஜெய்
சாயிராம் சாயிராம் சாயிராம் சாயிராம் ராம்
ராமா ஜெயராமா சாயிராமா - ஜெய் ஜெய்

## முருகன்

### பச்சை மயில் வாகனனே

பச்சை மயில் வாகனனே சிவ
பால சுப்பிரமணியனே வா - இங்கு
இச்சை இல்லாம் உன்மேல் வைத்தேன்
எள்ளளவும் ஐயமில்லை - (பச்சை மயில்) 1

கொச்சை மொழியானாலும் - உன்னைக்
கோஞ்சிக் கோஞ்சிப் பாடிடுவேன் - இங்கு
சர்ச்சை எல்லாம் மறைந்ததப்பா - எங்கும்
சாந்தம் நீறைந்தப்பா - (பச்சை மயில்) 2

வெள்ளமது பள்ளந்தனிலே பாயும்
தன்மை போல உள்ளந்தனிலே - நீ
மள்ள மள்ள புகுந்து விட்டாய் எந்தன்
கள்ளமெல்லாம் கரைந்ததப்பா - (பச்சை மயில்) 3

நெஞ்சமதில் கோவில் அமைத்தேன் அதில்
நேர்மை என்னும் திபம் வைத்தேன் - நீ
செஞ்சிலம்ப கொஞ்சிட வா மருகா
சேவற் கொடி மயில் வீரா - (பச்சை மயில்) 4

ஆறுபடை வீடுடையவா எனக்கு
ஆறுதலைத் தருந் தேவா - நீ
ஏறுமயில் ஏறிவருவாய் - மருகா
எங்கும் நீறைந்தவனே - (பச்சை மயில்) 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடல் ஓரத்திலே எங்கள்
அன்பான சண்முகனே - நீ
அலையா மனந் தந்தாய் - உனக்கு
அனந்த கோடி நமஸ்காரம் - (பச்சை மயில்) 6

**முருகன் அட்ஷரமாலை**

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய சோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உரகநாபன் மருகனே நீ வா வா முருகா

ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா

ஒய்யாரி வள்ளலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா வா வா முருகா
அகிலலோக நாயகனே வா வா முருகா
ஓடிவாநீ ஓடிவா நீ வா வா முருகா

ஆடிவாநீ ஆடிவா நீ வா வா முருகா

**வேல் முரகா மால்மருகா**

வேல் முரகா மால்மருகா வா வா சண்முகா
குல்பிடித்தேன் காத்தருள வா வா சண்முகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்வமாகச் சிவையணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல்தாங்கிய என்தேவா சண்முகா (வேல்)
ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தறே அற்புதறே ஆண்டவா சண்முகா
தேறுதலை தருபவனே தேவா சண்முகா

நா றுமாலை யணிமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனேசண்முகா (வேல்)

வீடும்நாடும் நின்திருத்தாள் வேண்டி னேன் சண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலனேசண்முகா
ஓடம் மனம் உன்னை நாட ஆடிவா சண்முகா
ஒருவனே என்வினையழித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்த சண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவெ என் முரகா சண்முகா
தில்லையில் ஆடுந் தேவி பாலாகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா (வேல்)
கடந்த பதம் தந்திடாய் சண்முகா
தோத்தரிதோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
குல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
குல்லெனச் சிலம்பொலிக்க ஓகவா சண்முகா (வேல்)

**அம்மன் பாடல்**

கற்பூர நாயகியே! கனகவல்லி!
காளி மகமாயி! கருமாரி அம்மா!
பொற்கோவில் கொண்ட சிவ காமியம்மா!
பூவிருந்த வல்லி தெய்வானையம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கால வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே!
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே! (கற்பூர)

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் நாகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே ஸர்வேஸ்வரி!
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி!
உவமான பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி! (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே! எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா!
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவளின் குரல்கேட்டுன் முகம் திருப்பு!
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு! (கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காண வேண்டும்!
காலிரண்டும் உன்னடியே நாட வேண்டும்!
பண்ணமைக்கும் நா உனையே பாட வேண்டும்!
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்!
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆக வேண்டும்!
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்!
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளையும் தீருமம்மா! (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்!
நெஞ்சினுலும் உன் திருநாமம் வழியவேண்டும்!
கற்றதெல்லாம் மேன் மேலும் பெருக வேண்டும்!
கவிதையிலே உன் நாமம் வாழ வேண்டும்!
சுற்றமெல்லாம் நீடுழி வாழ வேண்டும்!
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்!
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா! (கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ!
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ!
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ!
கன்றுக்கு பசுவின்றி சொந்தமுண்டோ!
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ!
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ!
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ!
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ! (கற்பூர)

அன்புக்கே நானடிமையாக வேண்டும்!
அறிவுக்கே என் காது கேட்க வேண்டும்!
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்!
வஞ்சத்தை என் நெஞ்சம் மறக்க வேண்டும்!
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்!
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்!
என்பக்கம் இவையெல்லாம் இருக்க வேண்டும்!
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்! (கற்பூர)

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்தன்னில் சக்தியில்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பவள வாயழகி உன்னெழிலோ!
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை!
அம்பளவு விழியாலே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை! (கற்பூர)

காற்றாகி கனவாகிக் கடலாகினாய்!
கயிறாகி உயிராகி உடலாகினாய்!
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்!
நிலமாகி பயிராகி உணவாகினாய்!
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்!
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்!
போற்றாத நாளில்லை தாயே உன்னை!
பொருளோடும் புகழோடும் வைப்பாய் என்னை! (கற்பூர)

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்
அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ லயம் தரும் வேணி அம்மா
மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்
நாமணக்க பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்க பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய்
மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய்
எங்கள் உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாய்
எங்கள் உள்ளக் கோவிலிலே உறைந்து நிற்பாய்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீ
வாணி சரஸ்வதி மாதவி பாரதி வாகதீஸ்வரி மாலினி
காணும் பொருளில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் வேணி
நான்முகன் நாயகி மோகனஷ்ரூபிணி
நான்மறை போற்றும் தேவி நீ
வானவர்க்கமுதே தேனருள் சிந்தும்
கான மனோகரி கல்யாணி
அருள்வாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ லயம் தரும் வேணி அம்மா
மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்து பாட வந்தோம்
அம்மா பாட வந்தோம்.

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெமைக் காப்பாயே
இம்மா நிலத்தில் நீ தானே
எங்கள் துர்க்கை தாய்தானே. (அம்மா, அம்மா)

இங்கே நாம்படும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய். (அம்மா, அம்மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா. (அம்மா, அம்மா)

அல்லும் பகலும் அழுகுரல்கள்
எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை
புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா. (அம்மா, அம்மா)

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று. (அம்மா, அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகிறாய். (அம்மா, அம்மா)

நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா. (அம்மா, அம்மா)

உன்னுடைய பார்வை யொன்றே உறுதுணையாய் வருகுதம்மா
கும்மிருட்டு பாதையிலும் பேரொளியாய்த் தெரியுதம்மா
என்னுடைய ஆட்டமெல்லாம் நீ அமைத்த மேடையில்
இசைவதுவும் அசைவதுவும் நின் கடைக்கண் சாடையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றிடையில் சிவந்த பட்டு திருக்கரத்தில் திரிசூலம்
நெற்றியினில் செந்தூரம் நீள்விழியில் கருணை மழை
சுன்னை நகர்த் மாரி அம்மா உன்னழகைப் பார்ப்பதற்கு
என் முகத்தில் அமைந்திருக்கும் இருவிழியால் இயன்றிடுமோ.

சிங்கத்திலே நீ வந்து சிறியேமைக் காத்திடுவாய்
எங்கள்பல குறையனைத்தும் ஈன்றவளே நீயறிவாய்
சிறியேங்கள் அழைத்த குரல் திருச்செவியில் ஏற்றருள்வாய்
அறிவேதும் இல்லாதேம் அன்புமொழி கேளுமம்மா.

அம்பிகையே உலகீன்ற ஆரணியே காரணியே
செம்பவள மேனியளே சிவக்கொழுந்தே வந்தருள்வாய்
அணுவாகி உயிராகி ஐம்பூதப் பொருளாகி
துணையாகி எமைக்காக்கும் மாரியம்மா வந்தருள்வாய்.

சுற்றிநிற்கும் உலகமெல்லாம் மரியென்று சொல்லுதம்மா
சூழ்ந்திருக்கும் உயிர்களெல்லாம் துதிக்குதம்மா உன் புகழை
வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் வணங்கிடுவேன் உன்னடியை
வரஇருக்கும் பிறவியிலும் வாழ்த்திடுவேன் உன்னருளை.

கேட்டவரந் தந்திடுவாய் கேதார நாயகியே
சூட்டுமலர்த் தாள்சரணம் சுந்தரியே சரணமம்மா
சர்க்கரையாய் முக்கனியாய்த் தமியேங்கள் மனத்தினிக்கும்
சக்திபீட மாரியம்மா சரணமலர் சரணமம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தர வதனி சுகுண மனோஹரி
மந்தஹாச முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே. (ஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையா யுன் புகழ் பாடிடவே. (ஓம்)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய். (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம். (ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
உலகை ஈன்றவள் துர்க்கா உமையும் ஆனவள்
உண்மை ஆனவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை ஆனவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மை ஆனவள் துர்க்கா ஜெயமும் ஆனவள்
அம்மை ஆனவள் அன்புத் தந்தை ஆனவள்
இம்மை ஆனவள் துர்க்கா இன்பம் ஆனவள்
மும்மை ஆனவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிரும் ஆனவள் துர்க்கா உடலும் ஆனவள்
உலகம் ஆனவள் எந்தன் உடமை ஆனவள்
பயிரும் ஆனவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

துன்பம் மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையும் ஆனவள் இன்பத் தோணி ஆனவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும் ஆனவள் துர்க்கா குழந்தை ஆனவள்
குலமும் ஆனவள் எங்கள் குடும்ப தீபமே
திரும் ஆனவள் துர்க்கா திரிசூலி ஆனவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைத் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

---

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாய் அம்மா!(கற்பக வல்லி)
பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட
(கற்பக வல்லி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இந்த வேளைதன்னில் சேயன் எனை மறந்தால்
நான் இந்த நாநிலத்தில் நாடுதல் யாரிடமோ
ஏன் இந்த மௌனம் அம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளும் அம்மா!
(கற்பக வல்லி)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமாஉனை நம்பினேன் அம்மா!
(கற்பக வல்லி)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக் காப்பாய்
வாகீஸ்வரி மாயே வாராய் இது தருணம்
பாகேஸ்ரீ தாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகினில் துணையம்மா!
(கற்பக வல்லி)

அஞ்சன மை இடும் அம்பிகை எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே உன்னிடம் - அருள்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய் நான்
ரஞ்சனியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா!
(கற்பக வல்லி)

---

ஸ்ரீ சக்ர ராஜ சிம்மாசனேஸ்வரி
ஸ்ரீ லலிதாம் பிகையே புவனேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

ஆகம வேத கலாமய ரூபிணி (2)
அகில சராசர ஜனனி நாராயணி

நாக கங்கண நடராஜ மனோகரி
ஞான வித்யேஸ்வரி ராஜராஜேஸ்வரி (ஸ்ரீ சக்ர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித மாயுன்னைப் பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடு மன்பர் பதமலர் சூடவும்
உலகம் முழுதும் என தகமுறக் காணவும்
ஒரு நிலை தருவாய் காஞ்சி காமேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய் (2)
உரிய பெரியோருடன் ஒன்றிடக் கூட்டி வைத்தாய் (2)
நிழலெனத் தொடர்ந்த முன்னூழ் கொடுமையை நீங்கச் செய்தாய் (2)
நித்ய கல்யாணி பவானி பத்மேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

துன்பப் புடத்திலிட்டுத் தூயவனாக்கி வைத்தாய் (2)
தொடர்ந்த முன் மாயம் நீக்கிப் பிறந்த பயனைத் தந்தாய் (2)
அன்பைப் புகட்டி உந்தன் ஆடலைக் காணச் செய்தாய் (2)
அடைக்கலம் நீயே அம்மா....அகிலாண்டேஸ்வரி (2) (ஸ்ரீ சக்ர)

**சமயபுரம் மாரியம்மா**

சமயபுரத்தாளே மாரியம்மா - அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா (சமய)

மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம் - அரிசி
மாவிளக்கு ஏற்றிவைத்து பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா - அம்மா
தூயவளே என்தாயே மாரியம்மா (சமய)

பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டுதிசைகளையும் ஆண்டவளே - அம்மா
ஈஸ்வரியே என்தாயே மாரியம்மா (சமய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தி கதறுகிறோம் கேட்கலையோ - தாயே
கல்லேதான் உன்மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே - எங்கள்
உமையவளே தாயே மாரியம்மா (சமய)

காலிற் சலங்கை ஒலி காதைத் துளைக்குதம்மா
பாவாடை தாவணியும் தானாக ஆடுதம்மா
பூவாடை வீசுதம்மா பூமகளே - உனக்கு
பாமாலை கொண்டு வந்தோம் பாரம்மா. (சமய)

-------------

ஜய ஜய ஜய சக்தி ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய வென தினம் பாடிப்பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய - அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

இரண்டுகள் போக மூன்றுகள் அல்ல
ஈஸ்வரி பலமருள்வாய் - அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமம்மா
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழக் கட்டம்மா காட்சி
தேவியுன் அடைக்கலம் நான் - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதி சக்தி, தாயே! என்மீ
தருள் புரிந்து காப்பாய்.

எந்த நாளும் நின்மேல் - தாயே!
இசைகள் பாடி வாழ்வேன்!
கந்த னைப்ப யந்தாய் - தாயே!
கருணை வெள்ள மானாய்!
மந்த மாரு தத்தில் - வானில்
மலையி னுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்று மன்றே!

------------------

கற்பகமே உனையன்றி துணையாரம்மா - நீயே
கதி எனப்போற்றும் எனைக் கண்பாரம்மா - அம்மா (கற்)

அற்புதம் எல்லாம் நிகழ்த்தும் அருள்திறம் உடையவளே
ஆனந்த வாழ்வு தன்னை அன்பர்க்கு அளிப்பவளே (கற்)

அலைகடல் ஓரத்திலே அமைந்த மயிலையிலே
கலைவடிவாய் திகழும் நின் திருக்கோயிலிலே
சிலைவடிவாய் நின்று உலகேழும் காப்பவளே
செம்பவளமேனி வண்ணன் மகிழும் உமையவளே (கற்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ புவனேஸ்வரி துதி

### பல்லவி

பவள மேனியும் பளபளக்க அந்தப்
பங்கஜ முகந்தன்னில் குங்குமம் ஜொலிக்க
பக்தர்கள் உன்னையே பணிந்து நிற்க
பரிவுடன் எங்களை நீ காத்து நிற்க
புவனேஸ்வரி - தாயே - புவனேஸ்வரி

### அனுபல்வி

பவளச் செவ்வாய்தனிலே திருவாய் மலர்ந்து பக்தி
பாடல்கள் பாடிட எமக்கருள் புரிந்து
பரவசமுடன் கேட்டு ஆதரவும் தந்து
வரங்கள் கொடுப்பாய் மனமும் கனிந்து
புவனேஸ்வரி - தாயே - புவனேஸ்வரி

### சரணம்

மாணிக்க நவரத்ன மணிமாலை மின்னிட
மரகத மணிமகுடம் முடிதனில் ஒளிவீசிட
சாமந்தி மந்தார கஸ்தூரி மல்லி ரோஜா
தாமரை மகிழம்பூ மலர்கள் உன்னை அலங்கரிக்க
புவனேஸ்வரி - தாயே - புவனேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளிய
## ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம்

தனந்தரும் வயிரவன் தளிரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திரந் தவன்பதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப் புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் !!

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் !!

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் !!

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ரசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வளங்கக்ளைப் பொழிவான்
வாழ்த்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணன் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் !!

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல் தரும் கற்பகம் நினைத்திடப் பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடு யாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் !!

சதுர்முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் !!

ஜெயஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெயஜெய க்ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெயஜெய வயிரவா செகம்புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனகிலை யீடு யாருமே யென்பான்
தனமழை பெய்திடுவான் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர்
# தியான சுலோகங்கள்

ஆஞ்சநேயம் அதி பாடலானனம்
காஞ்சனாத்ரி கமனீய விக்ரஹம்!
பாரிஜாத தருமூல வாஸினம்
பாவயாமி வபமான நந்தனம்!!

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக
ஆரியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டு அயலாலூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் எம்மை அளித்துக் காப்பான்.

## பாடல்கள்

ராம தூத ஹனுமான் விஜயதே!
ராமதூத ஹனுமான்!!

யோ ரகுபதினா ஸஹஸுக்ரீவம்!
மைத்ர்யாயோஜிதவான்!!

தீர்த்வாதுஸ்தர ஸிந்துஸீதா!
சுத்திம் ய க்ருதவான்!!

பித்வாரண்யம் ஹத்வா அக்ஷம்!
லங்காம் ஜ்வாலிதவான்!!

புனரேத்ய ஸ்ரீராமம் விட்டலம்!
அபி யோ ஹர்ஷிதவான்!!

– விட்டலபந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தே ஸந்தம் ஸ்ரீஹனுமந்தம்!
ராமதாஸம் அமலம் பலவந்தம்!!

ராமகதாம் ருதமனுநிவஸந்தம்!
பரமப்ரேமபரேண நடந்தம்!!

ப்ரேமருத்த கலமச்ருவஹந்தம்!
புலகாஞ்சித வபுஷா விலஸந்தம்!!

கதாசிதானந்தேன ஹஸந்த!
க்வசித் கதாசிதபி ப்ரருதந்தம்!!

ஸர்வம் ராமமயம் பச்யந்தம்!
ராம ராம இதிஸதா ஜபந்தம்!!

ஸத்பக்திபதம் ஸமுபதிசந்தம்!
விட்டலபந்தம் ப்ரதிஸூகயந்தம்!!

- விட்டலபந்தம்

மங்கல மூரவி மாருத நந்தன!
ஸகல அமங்கல மூலநிகந்தன!!

பவனதனய ஸந்தன ஹிதகாரீ!
ஹ்ருதய விராஜத அவத விஹாரீ!!

மாதா பிதா குரு கணபதி சாரத!
சிவாஸமேத சம்பு சுக நாரத!!

சரணவந்தி வினவௌ ஸப காஹூ!
தேஹூராதபத நேஹ நிவாஹூ!!

வந்தௌ ராமலக்ஷ்மண வைதேஹீ!
ஜோ துளஸீகே பரம ஸனேஹீ!!

- துளசீதாசர்

## நாமாவளி

ஆஞ்சநேய வீரா ஹனுமந்த சூரா
வாயு குமாரா வானர வீரா
மஹானுபாவா ஸ்ரீஹனுமந்தா!!

ராம லக்ஷ்மண ஜானகீ
ஜெய் போலோ ஹனுமான கீ!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவங்கமாலை

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின்றாடும் பிரான்றன்னைக்
கண்காய் காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம்பிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திறம் எப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கோ நீமுரலாய் - முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கை நீமுரலாய்

நெஞ்சை நீதினையாய் - நிமிர
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர் - கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கை யால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கை யாற்பயனென்

கால்க ளாற்பயனென்ன - கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென்.

உற்றா ராருளரோ - உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றார் ஆருளரோ

இறுமாந் திருப்பன்கொலோ ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன் கொலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மானபலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டனெந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்தன்று விடமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தம் மதியுநாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் (டு) உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள் அன்பர்கள்

| | | |
|---|---|---|
| நல்லநாள் | - | இன்று |
| நல்ல வெகுமதி | - | மன்னிப்பு |
| அறியக் கூடாதது | - | அடுத்தவன் செயலை |
| இருக்க வேண்டியது | - | மானம் |
| இருக்க கூடாதது | - | ஆணவம் |
| தேவைக்கேற்றது | - | சாமர்த்தியம் |
| எதிலும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| எதிலும் கடினமானது | - | பிழையின்றி வாழ்தல் |
| மேல் தரமானது | - | நட்பு |
| கீழ்த் தரமானது | - | தூரோகம் |
| செய்ய வேண்டியது | - | உதவி |
| செய்யக்கூடாதது | - | உபத்திரம் |
| அறிய வேண்டியது | - | உலக செயலை |
| அடங்கநினைப்பது | - | தாய், தந்தைக்கு |
| அடக்க நினைப்பது | - | உனது மனதை |
| நம்பக் கூடியது | - | மனச்சாட்சியை |
| நம்பக் கூடாதது | - | வதந்தியை |
| பார்க்கக் கூடாதது | - | பகுத்தறிவு |
| பார்க்க முடியாதது | - | உன் மரணம் |
| ஆணுக்குத் தேவையானது | - | உழைப்பு |
| ஆணுக்குத் தேவையற்றது | - | அலங்காரம் |
| பெண்ணுக்குத் தேவையானது | - | அடக்கம் |
| பெண்ணுக்குத் தேவையற்றது | - | தனிமை |
| வாழத் தேவையானது | - | நம்பிக்கை |
| வாழத் தேவையற்றது | - | சந்தேகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் உங்களை விரும்ப......

- விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய் நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்.
- பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்க தவறாதீர்கள்.
- முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்று சொல்லாதீர்கள்
- மெய்யானாலும் பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளிவிடாதீர்கள்.
- தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலைத் தவிர்க்காதீர்கள்.
- ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்கள்.
- அரைகுறை நண்பரானாலும் புதிய அறிமுகமாக இருந்தாலும் பண்பாகப் பேசுங்கள்.
- குற்றமென்றாலும் குறை என்றாலும் அதைப் பெரிது படுத்தாதீர்கள்.

## சிந்திக்க சில துளிகள்

- தொடங்கிய இடத்தை தெரிந்து கொள்.
- அப்போது தான் முடிக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம்.
- அன்பு என்பது உன் உள்ளத்திலிருந்தால்
- அறிவு என்பது உன்னை விட்டு அகலாது
- உன் சோம்பேறித்தனம் உன் வாழ்வின் தடைக்கல்லாய் அமையலாம். எச்சரிக்கையாய் இரு.
- உன் அவசரப்பேச்சு உன்னை அனாதரவாக்காமல் பார்த்துக் கொள்.
- ஆர்வம் உடையோர் ஆர்வத்தைத் தூண்டுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்பு உடையோர் அன்பைத் தேடுவர்.
- வருங்காலத்தை நினைத்து அஞ்சாதே.
- சென்ற காலத்தை நினைத்து அழாதே
- பெற்றோரின்பாதங்களைவிடபுனிதமானதுஉலகில்வேறொன்றுமில்லை.

## வாழ்க்கையில் வெற்றிபெற

1) அன்புகாட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
2) இரக்கங்காட்டு ஆனால் ஏமாந்துவிடாதே
3) பணிவாயிரு ஆனால் கோழையாயிராதே
4) கண்டிப்பாயிரு ஆனால் கோபப்படாதே
5) சிக்கனமாயிரு ஆனால் கஞ்சப்படாதே
6) வீரனாய் இரு ஆனால் போக்கிரியாயிராதே
7) சுறுசுறுப்பாயிரு ஆனால் பதற்றப்படாதே
8) தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே
9) பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே
10) நம்ப நட ஆனால் நம்பி நடவாதே
11) உழைப்பை நம்பு ஆனால் கடவுளையும் உன்னைப் பெற்ற தாயையும் மறந்துவிடாதே

## ஏழு நற்குணங்கள்

| | | |
|---|---|---|
| 1) | ஏழ்மையிலும் | நேர்மை |
| 2) | கோபத்திலும் | பொறுமை |
| 3) | தோல்வியிலும் | விடாமுயற்சி |
| 4) | வறுமையிலும் | பரோபகாரம் |
| 5) | துன்பத்திலும் | தைரியம் |
| 6) | செல்வத்திலும் | எளிமை |
| 7) | பதவியிலும் | பணிவு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்


"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு"



எங்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்த எமது அன்புத் தெய்வம் **அமரர் இரத்தினம் புவனேஸ்வரி** அவர்கள் இறைபதம் எய்திய செய்திகேட்டு நாம் சொல்லொண்ணா துயரத்தில் இருந்தபோது தக்க தருணம் அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் தங்கள் அனுதாபங்களையும், ஆறுதல்களையும் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், சகல கிரியைகளிலும் பங்கேற்று உதவியவர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் இம்மலரை சிறந்தமுறையில் அச்சிட்டு உதவிய அன்ரா பிறிண்டேர்ஸ் (யாழ்ப்பாணம்) நிறுவனத்தாருக்கும் இவ் உலகின் ஆதியும் அந்தமுமாக விளங்கும் அந்தப் பரம்பொருளின் திருவடிகளை சிரமேற் சூடி அனைவருக்கும் உளமொழி மெய்களால் நன்றி செலுத்துகின்றோம்.

நன்றி

**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PRINT @ ANDRA PRINTERS - 021 221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org